உ

# சர்வகலாசாலைத் தமிழ்ப்பத்திரிகை.

810

தொகுதி—க.

1923-24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சர்வகலாசாலைத் தமிழ்ப்பத்திரிகை.

ஆசிரியர்: — மூ. பாலசுந்தரம்.

தொகுதி—க.

1923-24.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம்

சிலர் மதாபிமானிகளாகவும், தேசாபிமானிகளாகவும், இது யாருடைய தொனியென்று தெரியாதவண்ணம் பேரிரைச்சல் விளைக்க, வேறுசிலர் "இவர்கள் வீணர்கள், திரவியமின்றி வாழ்வில்லாமையால் பொருளீட்டுவோ" மென்ன, கற்பதற்கன்றிவேறென்றிற்கு முரியரல்லாத கலாசாலை வாலிபர் பத்திரிகை வெளியிடுவாராயினர். என்னே! இது முதலில் ஓர் விந்த ஆச்சரியத்தைத்தரினும், உற்று நோக்குமிடத்து அவ்வாச்சரியம் நீங்கி உண்மை புலப்படும்.

வாலிபர் நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்குமுரியர்; வயோதிபரோ இறந்தகாலத்திற்குரியர்; வாலிபரின் மனதுகூர்மையாயிருத்தலின், நியாய அநியாயங்களை நன்குணர்வர். உலகத்தொல்லையாற் பீடிக்கப்படாமையால் தம்முழுப்பலத்தோடும் நோக்கத்தை நிறைவேற்றத்துணிவர். அவரிடத்திலே ஒருசாதியின் பெருமையும் பலமுந்தங்கி நிற்ப, அவர் உதவியின்றி அச்சாதி மேல்நிலைக்கு வருவதெங்ஙனம்? இத்தாலியின் ஈடேற்றத்திற்குக் காரணராயிருந்த மஸ்ஸினி (Mazzini) இவ்விரகசியத்தையறிந்ததினாலன்றோ தன் தேயத்தைக் கட்டாநின்ற விலங்குகளைத்தறித்தார். தற்காலத்தில், இந்தியாவின் நாடுகள் யாவற்றினும் மேம்பட விளங்குகின்ற வங்காளத்தை முன்னேறிவரச்செய்தோரிற் பெரும்பாலார் வாலிபரே!

இவையெல்லாமறிந்தும், குட்டியாடு கொழுத்தாலும் வழுவழுப்புத்தீரா தென்போர், நியாயத்தினின்றும் தங்கண்களைத்திருப்பி என்றுமிருளி லிருப்போமென்னும் பிடிவாதக்காரரன்றி வேறல்லர்.

# எம்நோக்கம்

மக்கள் தங்கருத்தை ஒருவருக்கொருவர் அறிவிக்குங்கருவி மாத்திரமன்று அவரின் மொழி. ஒருசாதியின் சனங்களெல்லோருமழிந்தாலுமதின் நிலையான இலக்கியத்தால் என்றுமச்சாதி அழியாதிருக்கும். ரோமருள் ஒருவருமிப்போதில்லாதிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பினும் ரோமசாதி பொய்யுடம்புபோய்ப் புகழுடம்புடைத்தாய் நிலைநிற்கின்றது. முன் நாளொருவண்ணமும் பொழுதொருமே னியுமாய் வளர்ந்துவந்து பின் சின்னாட்களாக வளர்ச்சியற்றிருக்குமினியதமிழுக்கு இக்கதி நேரா திருப்பதாக! ஒருசாதியின் இயல்பைவிளக்குவது அதின் இலக்கியமே. இது அச்சாதியின் விருப்பங்களையும் கொள்கைகளையும் மேலான நோக்கங்களையுங் கொண்டது. இந்நீரூற்றிலே பின்வரும் சந்ததிகள் சோர்ந்து போகாதபடி, பானம்பண்ணிக்கொண்டு முன்னேறிச்செல்லும். தம்மொழியையு மதிஉள்ள இலக்கியத்தையும் மறந்தசாதி நிலைப்பதில்லை.

எம்தேயமேன்மைக்காக உழைப்பவரில்அநேகர் இதன்உண்மையைக்காண்கிலர்; தமிழ்கற்றசிலரும, முன்னிருந்தவற்றையெல்லாம் பூசித்துக்கொண்டும் பலவிதமான கட்டுகளால் கட்டி எம்மொழியின் வளர்ச்சியைத் தடுத்துக்கொண்டும் நிற்கின்றனர். இவர்பணங்காத்த பூதம்போல்வார்; சிந்தனையற்றபொருள் தேட்டத்திலும், களியாட்டிலும் ஆழ்ந்த நம்மவரின் நிலைக்குத்தமிழ்மாதின் வரம்பெறுதது முக்கியகாரணமாகும். நோய்க்கேற்ற மருந்திருக்கவும் அதைத்தேடாதுவிடுதல் நிர்மூடத்தனமாதலின் எம் தேயநன்மைக்காகவும் எம் ஆன்மவளர்ச்சிக்காகவும் தமிழ் கற்றலோடு தமிழில் புதுநூல்களை யியற்றுவோருக்கியன்ற உதவிபுரியுமாறுமே சர்கலாசாலைத்தமிழ்ச்சங்கமுண்டானது.

## தமிழ்க்கயலேருட்சி.

ஓர் குறித்தகாலம் வரைக்குமே, இன்னமொழியிற் கவிஞர் இருந்தனர், பின்னும் இருப்பரோ வென்னில் அத்துடன் இம்மொழியை வழங்கிவருஞ் சாதியின் மனவெழுச்சியாவுமற்றுவிட்டனவென்பதாகும். மொழி உயிரோடிருக்கவும், இவ்வண்ணமாதல் எம்மறிவிற்சமைந்ததன்று. முன்னிருந்த மகாகவிஞரைப்போல கவிஞர் தோன்றச் சிலநாட்செல்லினும் றட்யாட் கிப்பிளிங் (Rudyard Kipling) அளவாதல் கவித்திறமுள்ளோரெப் போது மிருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாகப் பல தொல்லைப்படுந் தமிழ் மொழி பாவலரில்லாதிருந்திலது. சிலரின் புகழ் அவர் கிராமத்தைவிட்டு வெளிச்செல்லாது, அவருடன் மடிந்தது. முன்போற் கவிஞரிருப்பாரோ என்ற கொள்கையால் தமிழ்ச்சங்கப் பலகையிலிருக்கத் தகுதியுள்ளோரிலநேகரை யிழந்தனம்.

இற்றைக்கு அறுபது வருஷங்களுக்கு முன் செந்தமிழ்நாடாகிய யாழ்ப்பாணத்தின் மேன்மையுமழிந்து தமிழுமற்றுவிடுமோவென ஆங்கிலமொழியும் நாகரிகமும் பாவிற்று. அப்போது நல்லூரில் ஆறுமுகநாவலர் தோன்றி எம் நாட்டைக் கெட்டழியாது காத்தார். இவராலே, யாழ்ப்பாணத்தில் சைவாகமவருடசியுந் தமிழ்க்கலையருட்சியுந் தொடங்கின. ஆறுமுகநாவலிறந்தபின் தமிழ் வளராமலும் குறையாமலும் நின்றுவிட்டதுபோலத் தோற்றுகிறது.

தற்போது ஆங்கிலக்கல்லூரிகளிற் கலைபயிலுமாணவர் ஆங்காங்குத் தமிழ்ச்சங்கங்களை ஸ்தாபித்திருக்கின்றனர். இந்தியாவில் தமிழ்க்கல்வி, யாழ்ப்பாணத்திலும் பன்மடங்கு மேலான நிலையிலிருக்கின்றது. மதுரையில் தமிழ்ச்சங்க மொன்றுண்டாகித் தமிழுக்காக உழைத்துவருகிறது. இச்சங்கம், முன் மதுரையிலிருந்து கீர்த்திபெற்ற சங்கங்களைப்போலாகவேண்டுமென்பது தமிழிலார்வமுள்ளார் யாவரின் பிரார்த்தனையுமாகும்.

---

## இயற்றமிழ்.

தமிழ்மொழி யெங்குப்பேசப்படுகின்றதோ, அங்கெல்லாம் மிக்க கீர்த்திபெற்ற நாவல்லராகிய சுவாமி வேதாசலமவர்களும் இன்னும் மற்றோரும் தமிழில் வடசொற் கலத்தற்கெதிராய்ப் பெருவழக்கிடுகின்றனர். இந்தியரில் அநேகர் தாம் நினைத்தபடி பல வடசொற்கள் வழங்கிவருதலால் தமிழின் இனிமையையும் அழகையுங்கெடுக்கின்றனர். இவ்வாறைக்கண்டித்தலில் சுவாமியவர்கள் எடுத்துக்கொண்ட ஊக்கம் வியக்கத்தக்கது.

சிலவேளைகளில் ஒருவர் ஒன்றுகூற அவரைப் பின்பற்றுவோர் அவரின் விதியைக்கடந்து செல்வதுண்டு. தமிழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்றுதொட்டு வழங்கிவருஞ் சில வடசொற்களைக் களைதல்
தமிழ்மொழிக்குப் பெருங்கேடுவிளைக்கும். "ஞானம்" என்ற இனி
யவடசொல்லிற்குப்பதிலாய் வேறு உபயோகிப்பின் தமிழில் இ
னியசொல்லொன்றையிழத்தலோடு நாம் ஏற்குஞ்சொல், ஞானத்
தில் அடங்கியிருக்கிற முழுக்கருத்தையுங் கொள்ளுமோவென்ப
தையம், தமிழின் கலைஞானநூல்களில் வடசொற் பலவுள்ளன.
இவற்றை நீக்குதலெங்ஙனம்? ஒரு நூலின் ஆசிரியன் தன்
கருத்தைப் பலமாய் மற்றோர்க்குணர்த்துமாறு இன்றியமையா
ததெனக்காணின் வடசொல் வழங்கலாம். அவன் இலக்கண
முறைக்கு மாறாகவுமிருக்கலாம்.

மொழியின் சொற்றொகைக்குத் தக்கதாகவே அதின் பலமு
மிருக்கும். ஆங்கிலமெவ்வண்ணம் பிறசொற்களை எடுத்துத் தன்
னுடையதாக்கித் தன் சொற்களஞ்சியத்தை விசாலமாக்குகின்
றதோ அவ்வண்ணம் தமிழுந் தன் களஞ்சியத்தை விசாலமாக்க
வேண்டும்.

எம்முன்னோர் தம் நூல்களை இலக்கணமாயினுந் தர்க்கமா
யினுஞ் சாஸ்திரமாயினுஞ் செய்யுளில் வரைந்ததால் எம் வசன
நடை சொல்வன்மையற்றிருத்தலோடு தற்காலத்தில் அந்நடை
யில் நூலெழுதுவோரிற் சிலர் தங் கல்விப்பெருமையைக் காட்
டப்புகுந்து அதின் இனிமையைக் குறைத்துவிடுகின்றனர்,
வேறு சிலர் இயன்றளவு பிறருக்கு விளங்காதவண்ணம் பண்டை
க்காலத்துச் சொற்களையே வழங்குவோமென்கின்றனர். இவரால்
எம்மொழி பலனற்று வசனநடையும் விரைவிற் கெட்டுப்போகும்.
ஆங்கிலம் முதலிய வசனத்திற்சிறந்த பாஷைகளை யிவர் கற்றால்
இத்தகைய மூடத்தனத்துக் காளாகமாட்டாரென்பதற் கையமி
ல்லை. இனிமையுந் தெளிவுஞ் சொல்வன்மையும் பொலிந்த வசன
நடை எம்மொழியிலே நாம் ஏற்படுத்தினாலன்றி எம்மொழி
வரவரப் பலன் குன்றி மடிந்துவிடும்.

## நாடகத்தமிழ்.

இயலிசை நாடகமெனும் பிரிவுகளைக்கண்டும் தமிழில் முன்
நாடகநூல்களிலவென்பதெங்ஙனம்? வடமொழியை நன்கு கற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பாவலரிலநேகர் காளிதாசருடைய "சகுந்தலை" முதலிய இனிய நாடகங்களின் அழகை அறிந்திலரோ? மேலைத்தேய மகா கவிஞன் கேற்றே (Goethe) சகுந்தலையை வாசித்த ஆனந்தத்தால் காளிதாசரை வணங்கினனெனின், எம்பாவலர் மெய்க் கவிஞராயிற் சகுந்தலையின் அழகால் நாடகத்தின் மேன்மையை யுணர்ந்திருக்கவேண்டும்.

நாடகமில்லையேல் அஃதெம்மொழிக்கோர் வடுவாகுமென்றே, ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரைக் (Shakespeear) கற்றோரில் நாடகமியற்றுதற்கேற்ற வரமுடையோர் சிலர் அவ்வகை யிலக்கியத்தை எம்மொழியிலுண்டுபண்ணினர். திருவனந்தபுரத்திற் தத்துவசாஸ்திர பண்டிதராயிருந்த திரு சுந்தரம்பிள்ளை அவர்கள் "மனோன்மணீயம்" என்னும் நாடகநூலை எமக்கீந்தார். இவர் ஓசையியைபில்லாச் செய்யுளில் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள்போல் தமிழிலும் நாடகமெழுதும்நோக்கங்கொண்டு, அகவலில் தம் நாடகத்தை வரைந்தார். எம் செய்யுளிலிருக்கும் மோனை முதலியவற்றாலாகும் கிண் கிணெனும் ஒலி நாடகத்தினழகைக் கெடுக்குமாதலால், ஓசையியைபில்லாச் செய்யுள் நடையொன்றை உண்டாக்கினாலன்றித் தமிழ்நாடகம் மேல்நிலைக்கு வராது. முன்னோர் கொடுத்தது போதுமென்னில் எம்மொழி வளருவதுமில்லை; நாம மேன்மையடைவதுமில்லை வசன நடையில் நாடகமெழுத வென்றாலோ அஃது இன்னும் இளமைப் பருவத்திலிருப்பதால் நூலின் வலிமை குன்றிப்போம். வசன நடையிலெழுதப்பட்ட திரு சம்பந்தமுதலியாரவர்களின் நாடகம் உன்னதநிலை யடையாதிருப்பது எம் வசனநடையின் பலவீனத்தாலென்பாம்.

நாடக விலக்கியத்தைத் தமிழில் வருவிக்கத்துணிந்த திரு சுந்தரம்பிள்ளை அவர்கட்கும் திரு சம்பந்தமுதலியாரவர்கட்கும் நாமென்றும் கடமைப்பட்டுளோம், மார்லோ (Marlowe) தோன்றியே ஷேக்ஸ்பியர் தோன்றியதுபோல் முன் தூதராமிவர்கள் தோன்றியபின் நாடக மகா கவிஞன் தோற்றுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி

தமிழ்ப்புலவர் கவி எத்தன்மைத்தெனக் கருதினரோ நிச்சயமாய் அறியேமாயினும், அவர் இவைதக்கவையென்று விட்டுச் சென்றவைகளிலிருந்தும் ஆங்கில கவிச்சக்கரவர்த்திகளின் பாக்களினின்றும் எமக்குப் புலப்பட்டதை ஈண்டுக்கொள்வாம். இலக்கண வழுவின்றிப் பாட்டெழுதுவோ ரெல்லோருங் கவிஞரா? சிற்சிலதோற்றங்கள், காட்சிகள், தம்மனதில் உண்டாகும்போது உடலையும் ஆவியையும் தம்வசமாக்கி ஆழ்ந்தவுணர்ச்சியை யுண்டுபண்ணும். இவ்விதமாய் உலகத்தோற்றங்களுடன் ஒற்றுமைப் படுதலாற் பிறக்கின்ற உணர்ச்சியை கேட்குந்தோறும் செவிக்கின்பம் பயக்கவும், தம்மனதிலெவ்வண்ணம் கூர்மையாயும், விரிவாயும் இருந்ததோ, அவ்வண்ணம் பிறர்மனத்தில் தோற்றுவிக்கவும் தக்கபாஷையில் எழுதுவதைக்கவியென்பாம்.

இதில் தொன்று தொட்டு வழக்கத்துக்குமாறாய் சிலபிழைகள் வரினும் சிறந்த கவியெனவே யேற்கப்படும். ஆங்கிலக்கவிஞரில் போப்பையும் (Pope) பைரனையும் (Byron) ஒப்பிடில், முற்கூறப்பட்டவர் பிழையின்றிப் பாட்டெழுதின ரெனினும், பைரனையே (Byron) மகா கவிஞனெனக்கொள்வர். எம்மொழியில், கம்பர் சிலசொற்களை நீட்டியும் சிலவற்றைக் குறுக்கியும் பாடியிருக்கிறார். அவர்,

> "குமுதனிட்ட குலவரை கூத்தரிற்
> றிமித மிட்டுத்திரியுந் திரைகடற்
> றுமித மூர்புக வானவர் துள்ளினர்
> அமுத மின்னு மெழுமென வாசையால்"

என்பதில் துளியென்ற கருத்துப்படத் "துமி"யை வழங்கியது பிழையென்ற புலவருக்கு, இஃது உலகவழக்கின்படி எனக்கூறித்தப்பினர். அன்றியும் இக்கவியுடன் சம்பந்தப்பட்ட கதையிலிருந்து "துமி" முன் னுலக வழக்கிலுமிருந்ததில்லை யென்றே தீர்க்கலாம்.

தற்காலத்திலோ எவ்வகையான அழகுவாய்ந்திருந்தாலும், இலக்கண வழுவிருப்பின் அதைக்கவியென ஏலார் நம் 'புலவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் தம் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமை.

ஒருநாடானது பலவிதமான முன்னேற்றங்களால் சிறப்புற்றுச் சுதந்தரமுடையதாக விளங்கப்பெறுதல் வேண்டுமாயின் அஃது அந்நாட்டு மக்கள்தம் நிலைமையைப் பொறுத்ததாகும். இலங்கை இந்தியா முதலான தேசங்களில் வதியப்பெற்றுள்ள தமிழ்மக்களின் தற்கால கேவல நிலைமைக்குக் காரணம் யாதெனச் சிந்திக்கக் கடமையுடையவ ராகின்றோம். இலங்கை, இந்தியா முதலான நாடுகளில் வசிக்கும் தமிழ்மக்களாகிய எமது பண்டையோர்கள் ஏறக்குறைய இரண்டாயிர வருடங்களுக்கு முன்னர் அதாவது கிறிஸ்துவுக்கு முன்னதாகவே மகா உன்னதநிலைமை அடையப்பெற்றிருந்தனர் என்பதற்கு அக்காலத்து நூல்களான அகத்தியம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலான நூல்களே போதிய சான்றும். அக்காலத்து அரசாட்சிபுரிந்த அரசர்களும் தமிழ்மக்களேயாவார். அவர் பேசிய பாஷை தமிழ்மொழியேயாகும். அவ்வரசர் பெருமக்கள் குடிகளிடம் ஆறிலொரு கடமைவாங்கி நடுவுநிலைமை தவறாது தமது நாட்டைப் பரிபாலித்து வந்தார்களென்பது அவர்கள் காலச்சரித்திர ஆராய்ச்சியினுல் நன்கு அறியலாகும். பண்டைத்தமிழ் அரசராயினோர் தம் தாய்மொழியாகிய செந்தமிழைப் பெரிதும் பாதுகாத்து ஆதரித்து வந்தார்களென்பதையும் அக்காலத்துச் சங்க நூல்களாலே நன்கறியப் பெறுவதாகும். இவையன்றி அக்காலத்திய அரசாட்சியைத் திறம்பெற நடாத்தி ஜெயக்கொடிநாட்டிய அரசேறுகளான சேரன், செங்குட்டுவன், சோழன், செங்கணுன் பாண்டியன், நெடுஞ்செழியன், முதலான மூவேந்தரால் முறையாகத் தாலாட்டி வழர்க்கப்பெற்று முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்களின் வழியாக வள்ளுவர், நக்கீரர்போன்ற பல புலவர்களால் புகழ்ந்து கொண்டாடி அரங்கேறப்பெற்றதும், இயல் இசை நாடகம் எனப்பெறும் நம் முத்தமிழே யல்லாமலும் அகஸ்தியர் நாவிலேபிறந்து, ஆந்திரம் முதலாய பலபாஷைகளின் தாயாய்ச்சங்கப்புலவர்கள் நாவிலே நடம்புரிந்து திராவிடஉலக முழுவதும் ஏகசக்ராதிபத்தியம் செலுத்திவருவதும், நம்மைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வளர்த்தும் பாலூட்டித் தாலாட்டித் தூங்கவைத்து மழலைச்சொற்களால் எமது தாய்தந்தையரை மகிழ்வுறச்செய்து ஆசிரியர் முதலான பெரியோர்களால் ஆதியில் எமக்கு உபதேசிக்கப்பெற்றுப் பண்டைக்காலமுதல் எமது முன்னோர்கள் பேசிய பாஷையும் எழுதிவைத்துள்ள பாஷையும், இப்போதும் எமது தாய்தந்தையர் சுற்றமித்திரர் ஆயினோர் பேசுகின்ற பாஷையும் தேனினுமினிய நம் செந்தமிழே. இவ்வாறாகப் பல பெருமைகட்கும், இடம் அளிக்கப்பெற்றுத் தானும் தன்னந்தனியள் என்னும் தலைமைப்பெயரை வகுத்து என்றென்றைக்கும் இளமைபொருந்தப்பெற்று நிலைநிற்பவளாகும் தமிழரசியை நாம் இகழலாகுமா? உலகத்தோர் புகழ்வதான உத்தம தமிழணங்கை உள்ளபடிகொண்டாட முன்வராதவரானோம். இவ்வம்மையாரைப் பின்பற்றினால்மட்டுமே நாம்உன்னதநிலைமையை எளிதில் அடையலாகும்.

முதலாவதாக எமது மாணவ மாணவியர் தம் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமை தம் தாய்ப்பாஷையாகிய செந்தமிழை நன்கு கற்பதேயாம். அப்பாஷையினால் உண்டாகப்பெறும் ஞானத்தைப் போதிய அளவு சம்பாதித்துக்கொள்வதற்கு என்று முன்வருகின்றார்களோ அன்றுமட்டுமே தமது நாட்டிற்கு நன்மை செய்வதற்கு முன்வருபவராவார். இலங்கை இந்தியா முதலான இடங்கள் பண்டைப்பெருமை குன்றிப் பரிதாபநிலைமையிலாய்விட்டமையாதெனை ஆராயுங்கால் நமது தாய்மொழியாகிய தமிழ்மொழியை ஆராய்ந்து அவற்றின்கண் ததும்பப்பெற்றுள்ள சாரத்தைப் பருகாத பெருங்குறையேயாகுமென்பதை நன்கறியலாகும். தமிழ்மொழியை மெய்யன்போடு கற்று ஆராயுங்காலே அம்மொழியின் மாண்பும் மகத்துவமும் விளங்கும். தமிழ்மொழியிலடங்காத மேலான தத்துவ உண்மைப்பொருள்கள் வேறெம்மொழியிலாயினும் இருத்தலாகுமென எண்ண இடமின்று. இவ்வுலகின்கண் மேலான மக்கட்பிறவியை அடைந்துள்ள நாம் அடையவேண்டிய பேறுகளாய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அதிதிறமையுடன் எடுத்துக்காட்டுந் திருக்குறள் ஒன்றைமாத்திரம் ஆராய்வோமாயின் அன்னியர்கல்வி எமக்கெத்துணையாகும் என்பது புலப்படும். ஆகையால் இலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை இந்தியா முதலான இடங்களில் வாழும் தமிழ் மாணவ மாணவியர் தம் தாய்மொழியாகும் செந்தமிழை இலக்கண இலக்கிய வரம்பு பிறழாது கற்றுத் தேர்ந்து தமது நாட்டிற்குப் பலவிதமான நன்மைகளைச்செய்யக் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றார்கள்.

இலங்கை இந்தியா முதலான விடங்களின் வருங்கால ஈடேற்றத்தில் ஈடுபட்டுழைக்கப் பெறுபவர் எமது பிற்சந்ததியாராகிய இளைஞரே யாதலால் அவர்களிடையில் தேசாபிமானம், பாஷாபிமானம், முதலான சுதந்தரதாபத்தை உதிக்குமாறு செய்தல் அறிஞர்தம் கடனாகும். தாய்ப்பாஷையில் ஆழ்ந்த ஞானம்கிடைக்கப்பெற்றாலேயன்றி வேறெவ்விதத்திலேனும் சுதந்திரதாபத்தைப்பெற இயலாதவராய் விடுவார் என்பதறகுத் தடையின்று.

இலங்கைநாட்டின் குடிகளுள் பெருந்தொகையினராயவர் சிங்களரும் தமிழருமே யாவார். இவ்விரு சாதியாரும எமது தாய்நாடாகிய இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறினவராம் என்பதை மறத்தலாகா. சிங்களருடைய மதமும் இந்தியாவிலேதான் முதன் முதலாகத் தோன்றியதாகும். சிங்களருடைய பௌத்த மதத்தையும, பௌத்த தர்மங்களையும் உண்டாக்கிய கௌதம புத்தர் ஓர் இந்திய அரசிளங்குமாரரேயாகுவார். ஆதலால் தமிழரும், சிங்களரும் ஒருதாய் வயிற்றில் உற்பத்தியானவர் போல்வார். இலங்கை நாட்டின் பெருந்தொகைக் குடிமக்களான இவவிரு சாதியாரும் சகோதரத்வம பூண்டு ஒற்றுமையுடன் ஒத்துழைத்தாலன்றி இலங்கை நாடானது பண்டைப் புகழையும் பெருமையையும் பெற்றுக்கொள்ளாது. இவைகளை இருவகுப்பிலுமுள்ள சகோதர சகோதரிகள் கவனித்தல் வேண்டும்.

பண்டைக் காலத்து உன்னத பதவியை மீண்டும் நாம் அடைதல் வேண்டுமானல், நாகரிகஙகளை பறவேயகற்றி எமத் தாய்ப்பாஷையாகிய சிஙகளம் தமிழ் எனப் பெறும இவ்விருபாஷைகளையும் எம் இலங்கை மாணவ மாணவியருக்குக் கட்டாய ஆரம்பக் கல்வியாகப் பாடசாலைகளிற் கற்பித்தல் வேண்டுமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தாரை அனுமதிக்கச் செய்தல் வேண்டும். இலங்கை நாட்டு மக்களின் தற்கால மனோ நிலைமையை நன்காராயுங்கால் அன்னியரின்மீளாத அடிமைகளாகவே யிருப்பரென்பது இனிது புலப்படலாகும். தம்மைப் போன்று தமது பிற் சந்ததியாராகும் இளைஞர்களையும் அன்னியர்தம் அடிமைகளாக விருக்குமாறு வழிகாட்டி வருவதைக் கண்ணுறுந்தோறும் எமதாவி துடிக்கின்றது. எமது நாட்டு மக்களின் அடிமைப் புத்தியை ஒழிப்பதற்கு 6000 மைல் கடக்கப்பாலிருப்பவராகும் வெள்ளையர் சகாயம் வேண்டுமா? எமது நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றத் தவறினமையாலன்றோ அன்னியர் அடிமைகளாகவும் தேசத்துரோகியராகவும் விளங்கப்பெறலானோம். எமது தாய்மொழியாகிய செந்தமிழைக் கல்லாதொழிந்து அந்நிய மொழியைப்பயில முன் வந்தமையாலன்றோ எமது இல்லாச்சிரமதர்மங்கள் முறை பிறழலாயின. இல்லாச்சிரமதர்மத்தை வழுவாதுமுறைப்படிநடாத்தி உலகினர்க்குணத்தியவர் திருவள்ளுவரும் அவரது மனைவியார் வாசுகி அம்மையார் போன்றுள்ள எமது மூதாதையரேயாகுவர். எமது பண்டையோர்களுள் ஆண்பாலார் புலமை வாய்க்கப் பெற்றிருந்தமையேயன்றிப் பெண்பாலாருள்ளும் புலமையடையப் பெற்றவர் பலர் இருந்திருக்கின்றார்கள். அக்காலத்தில் இக்காலம் போலன்றல்லாது, ஆண் பெண் என்னும் பாகுபாடின்றி அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு முயன்றே வந்திருக்கின்றார். உதாரணமாகத் திருவள்ளுவநாயனார் அவர்கள் செய்தருளிய திருக்குறளின்கண் சாற்றுகவி பாடியவருள் பெண்பாலரும் மிளிருவராயினர். ஆதலால் இங்கு நாம் மாணவ மாணவியர் இருவரையுமே குறிப்பிட்டுள்ளோம். ஒருஇல்லத்தை முறைப்படி நடாத்துதற்கு வாழ்க்கைத்துணைவராகும் கணவனும் மனையாளும் எவ்வாறு வேண்டப்பெறுவரோ அவ்வாறே ஒருதேசமானது முன்னேற்றமடையப் பெறுதல் வேண்டுமாயின் அத்தேயமக்களான ஆணும் பெண்ணும் ஒத்துழைத்தல் வேண்டும். ஒத்துழைப்பதற்கு இன்றியமையாத சாதனம் கல்வியறிவே. அக்கல்விதான் தேசீய பாஷையை ஆரம்பமுறையாகக் கற்றலாகும். மக்கள் அனைவரும் கல்வியறிவால் சமத்துவம் அடையப்பெற்று விட்டால் ஒற்றுமை தானே உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாகலாகும். ஒற்றுமையுண்டாகி விட்டால் ஒத்துழைப்பு ஆரம்பமாகும். ஒத்துழைத்தல் ஆரம்பமானால் தேசம் நன்னிலைமையடையப்பெற்றுத் தேசமக்களான ஆண்மக்களும், பெண்மக்களும் அட்ட ஐஸ்வரியத்தோடும் சுகமாக வாழ்வார்கள். அந்நிலைமையைப் பெறுவதற்காகவே எமது வாலிபமக்களைச் சிறந்த வீரர்களாகவும், இடசித்த புருஷர்களாகவும் இயங்கச் செய்து இலங்கைநாட்டிற்குப் புத்துயிரளித்தல் கடமையாகும். இலங்காமாதாவானவள் தனது பண்டைப்புனித வாழ்வைத்திரும்பவும் பெற்றுக் கொள்ளுதலாகும். நாட்டின் நன்மைக்காகப்பாடுபட முன்வராதவர் மக்களாகார். வீட்டிற் கவலையுடையராகும் மக்கள் தமது நாட்டிலும் கவலையுடையராயிருத்தல் வேண்டும்.

தற்காலம் இலங்கை நாட்டின் மாணவ மாணவியருக்கு ஊட்டப்பெறும் கல்விமுறையால் அவர்கள் தம்நாட்டிற்குச் சிறிதேனும் பயன்படுவாரா? ஏதாவது நன்மை செய்தல் கூடுமா? என்பதை அறிவுடைய சான்றோர் சிந்திக்கக்கடவர். எமது மாணுக்கர் பயிலும் தற்காலக் கல்விமுறையானது அவர்களையும் அவர் சந்ததியார் சந்ததியார் ஈறானவரையும் மீளாத அடிமை நரகத்தில் வீழ்த்துவதாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. எமது இளைஞாயினோர் அன்னியக்கல்வியைப் பயிலினும் நம்மொழியிலேயே பேசப்பழகுதல் வேண்டும் பிரசங்கங்கள் புரிதலும் வேண்டும். வேற்றுமொழியில் பேசுவதை விலக்கல்வேண்டும். அந்நியபாஷையிற் பேசவரும் நம்மவரையும் கடிந்துகொள்ளாது இன்மொழியாலேயே நம்மொழியிற் பேசுமாறு செய்தல் வேண்டும். நம் தமிழ்மொழியை நன்கு விருப்பிக்கற்ற ஆங்கில அறிஞருள் ஒருவராகிய பாரிசிலுள்ள ஜூலியன் வின்ஸன் என்பவர், மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிலைநாட்டிய தமிழ் வள்ளலாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் சிவபதமடைந்தபோது பாடிய செந்தமிழ்க் கவியைக் கீழே காணலாம்,

"செந்தமிழ் நாடெல்லோரும், சேர்ந்தேத்து மாமகனே
சந்த புகழ்விட்டுத் தவறினையோ—வந்த
விருவியுனைம் வென்று கடந்திலையோ வின்னும்
வெருகலஞ் செய்வாய்பிறந்து"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற மூன்று வெண்பாக்கள் எம்மொழியிற் பாடி நம்மவருக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தியிருத்தலைக் காண்க. ஆதலால் எமதிலங்கை நாட்டின் வருங்கால ஈடேற்றத்திலீடு பெற்று மகுடம் போன்றிருக்கப் போகின்றவராகிய மாணவ மாணவியக் களஞ்சியங்களாகும் சிங்களர், தமிழராகிய இருவகுப்பினரும் சகோதரத்வம் பூண்டு ஒற்றுமையுடன் ஊக்கமாகவும், உறுதியாகவும் தம் தாய் மொழியாகிய இருபாஷைகளையும் நன்குகற்க வேண்டியவராகின்றார். அன்றி இலங்காமாதாவின் அபி விர்த்தியின் பொருட்டு இருபாஷைகளையும் இருவகுப்பினரும் கலந்து கற்றல் அவசியம்.

இங்ஙனம்

மா. மங்களம்மாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணன் தூதுச்சருக்க மந்தண நுண்மை ஆராய்ச்சி.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாரதப்போரில் யாவரையும் நீறுக்கிப் பூபாரந் தீர்க்கவந்த மாயவராதலின் எவ்விதத்தும் பஞ்சபாண்டவர்களையும் துரியோதனாதியரையும் யுத்தகளத்திற் சந்திக்க வைத்துத், தம் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் விரதமுடையராய்ப் பாண்டவர் முன் தோற்றினர். இவரது மனக்கிடக்கையை நன்குணர்ந்தவன் பாண்டவரின் பின் தோன்றலாகிய சகாதேவ னொருவனே யென்ப.

தருமபுத்திரர் அறமும் மெய்மையுமே அல்லும் பகலும் தம் மனத்து நிசழக்கோபந் தீதெனச் செவ்விதினுணர்ந்து ஒழுகும் தருமசீலராதலின் துரியோதனாதியராந் தந்துணைவருடன், இருநிலங்காரணமாப் போர் புரியாது சாமோபாயம் பூண்டொழுகுங்கருத்துடையராய், கிருஷ்ண பகவானை நோக்கி "அருஞ்சமரம் புரியும் வகை யவருணர்த்தாராணுலு மறமொன்றின்றிப், பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்று" என அருள் வெள்ளம் பெருகுமாறு கூறினர். அப்பொழுது கிருஷ்ண பகவான் தமது கருத்திற்கும் பாண்டவரின் முன் தோன்றலாகிய தருமபுத்திரரது மனக்கிடக்கைக்கு முள்ள தாரதம்மியம் வடதென் துருவபேதமெனக் கண்டு "செய்வராவினை முக்கணுந்திருநாடு பெறநினைவோ சென்று மீளப், பைவராயருக்காணிற் பாவின்று திரிதாநினைவோ பகைத்த போரி, லுய்வராரென விரைவினுருத்தெழுந்து பொர நினைவோ வுண்மையாக, ஐவராமவனிபர்க்கு நினைவேது" என வினவா நின்றனர். பாண்டவரதியற்கையையும் மனோபாவங்களையும் கிருஷ்ணபகவான் முன்னரே யறிந்துள்ளாரென்பது பாரத பாராயணர் யாவரும் நன்கறிந்த விஷயமே. இருதிறத்தினருஞ் சமாதானமாய்க் குருநாட்டிற்கலந்து வாழ்தல் சாத்தியமாகுங்கால் கானகத்தே மீண்டுந் தம்பியாருடன் சென்றுயிர் வாழ்தலே நன்றென மதித்த தருமபுத்திரருடைய கருத்தையும், தமநோக்கத்திருந்ததாகிய பாரதப் போரையுமொருங்கடக்கிக் கிருஷ்ண பகவான் சண்டிக்கலைக் கூறலாயினர். முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைய செய்யுளின் முதலாமடியில், "திருநாடு பெற நினைவோ" என்றதற்கும், மூன்றாமடியில் "உருத்தெழுந்து போர நினைவோ" என்றதற்கும் திரிகால ஞானியாதலின் ஈற்றில் பேதமின்றென வுணர்ந்து. தாம் கூறியமூன்றுவிதத்திலும் முக்கியமான விரண்டையுந் தம் கருத்திற்கிசையவே கூறினர். கிருஷ்ணபகவான் முடிவிற்கூறியது போரைப்பற்றியாதலின், அவர் போரைத்தொடக்கும் நோக்கமுடையாரெனச் சந்தேகம் நிகழ்ந்தமையானும் தமதியற்கைக்குப் போர் சுத்த விரோதமாகையாலும், "வயிரமெனுங் கடுநெருப்பை மிக மூட்டாது உயிரனையாய் சந்துபடவுரைத்தருள்" எனத்தருமபுத்திரர் திருவாய்மலர்ந்தருளினர். கிருஷ்ணரிலேயே முழு நம்பிக்கையையும் வைத்து இருதிறத்தினருஞ் சந்துபடச் செய்தருளல் வேண்டுமெனத் தருமபுத்திரர் கேட்டமையின், தம்மனக்கிடக்கையானது போரேயென வெளியிட்டு, பாண்டவர்க்கு வயிரமெனுங் கடுநெருப்பையே மூட்டும் நோக்கமுடையாராய் அவர்கள் முன்னுடிய சூதின் கொடுமையைக்குறித்தும் வனவாச கஷ்டத்தைக் குறித்தும் கூறினர். இவற்றையவர்கள் ஞாபகத்திற்கு வரச்செய்தமாத்திரத்தில், திரௌபதியின் மானபங்கத்தையும், கானகத்தெய்திய துயர்களையும் நினைந்து போரையே நாடுவார்களென நன்கறிந்தவராதலின் கிருஷ்ணபகவானிங்ஙனஞ் செய்தனர். எங்ஙனமாயினும் இன்னமும் போரை வெறுத்தானென்பதும், சகாதேவனொழிந்த ஏனையோர் மனவயிரமடைந்து போரையே நாடினரென்பதும் நூல்வாயிலாக நுண்ணிய விஷயங்களை யறிந்தார்க்குச் சொல்லவும வேண்டுமா? தருமபுத்திரர் இன்னமும் போரை வெறுத்தாரென்பதற்குச் சான்றாக "குலவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங் கொன்று போர்வென்றரவ நெடுங்கடலாடை யவனியெலாந் தனியாளுமாசுதன்னிற், கா வுறையு மனத்தாதை முனிக்குரைத்த மொழிப்படியே கானந்தோறு, மிரவுபகற் பலமூல சாகநுகர்ந்துயிர் வாழ்தலினிதுனன்றே" றெனவுங் கூறியுள்ளனர். இங்ஙனந் தருமபுத்திரர் கூறியதைக்கேட்ட கிருஷ்ணபகவான் தமது கருத்து ஐவரும் பட்டகஷ்டங்களை அவருக்கு நினைவூட்டிய மாத்திரத்திற் பூர்த்தியாக இடமின்றெனக்கண்டு "நம் ஆண்மையுஞ் சபதமுமெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கே? இவ்விரண்டையு மிழந்து விடப்போகின்றீர்களன்றோ! நும்மையுலக மிகழப்போகின்றதே" யென்றனர். இன்னும் பிற வுமெடுத்துக்கூறியதின் பின்னரே, மற்றெல்லா வழிவகைகட்கு மிசையாத பட்சத்தில் போர்புரிதல் வேண்டுமெனத் தருமபுத் திரர் நினைக்கலானூர். சகாதேவனொழிந்த முன்னைய மூவர்க்கு மோ முன்மூண்ட கோபாக்கினியானது ஓங்கி வளர்ந்து அவ ரையாட்கொண்டது.

அப்பொழுதுதான் தருமர் கிருஷ்ணரை நோக்கி நீரே துர தாகவேகிச் சமாதானநிலையை வருவிக்கும்பொருட்டு, "நந்நார் வெம் புனநாட்டின் றிறம்வேண்டு நாமொன்று நல்காநெனில், ஐந்தூர்வேண் டவையிலெனி லைந்திலம்வேண் டவைமறுத் தா லடுபோர் வேண்டும்." அப்பொழு துலகோர்க் கெங்களாண் மையைக் காட்டிச் சபதத்தையும், நிறைவேற்றுவோமென்றனர்.

வீமன் பிறர்மனையவரைப் பெற்றதாயென்பதும், பிறர்பொ ருளெட்டியே யென்பதும் பிறர்துயர் தன்துயரென்பதும் பிறர் வசையுரைத்தல் பெருமை யன்றென்பதும், மறலியுமடியுமாறு மல்லியற்கை கூர்ந்தவனுமான வாயுவின் மைந்தனுகையினுலே தன் மனைவியாகிய திரௌபதியைச் சபையிலே மானபங்கப்படு த்தியவனும், தங்கள் தாயமாகிய குருநாட்டிற் பாதியை அநி யாயமாக வபகரித்துக்கொள்ள வெண்ணுகின்றவனும், தன்னு டன் றமையன் தம்பிமார்களை வசையுரைத்தவனுமாகிய துரி யோதனன்மீது தன்புயவலிமையைக் காட்டிக் குருநாட்டைப் பெறும் வாஞ்சையானது அவனுள்ளத்திற் குடிகொண்டு கோ பத்தை அழல்போல் வளர்ப்பது இயல்பன்றோ. பிறர்துயரைத் தன்துயராக மதித்தலினுலே தன்மனைவியாகிய திரௌபதியி ன்றுயரையும் தன்றம்பிமார்துயரையும் தன்றுயரென மதித்து அதற்குக்காரணமாக விருந்த துரியோதனன்மீது அடங்காக் கோபங்கொள்வது மியல்பன்றோ? இவருடைய மனமானது இந்த நிலைமையிலிருக்கும்போது தான் தருமர் "நந்நார்வெம் புனநாட்டின் றிறம் வேண்டு..................... .........." என்று கூறினர்.

இச்சொற்களானவை தம் புயவலிமையையும், அருச்சுன னின் வில் மகத்துவத்தையும், மற்றிருவரின் போர்புரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனையும், திருமாலின் சார்பையும். நன்கறிந்த வீமனுக்கு அவன் செவியில் தீக்கொள்வேலைச் சொருகுதலொத்து தாங்கொணு வெஞ்சின மனத்தின் மூட்ட நாத்தோமினுரை பதறக் கதுமெனவுற்றெழுந்திறைஞ்சி ஞாலமெல்லாம பூத்தோனே ஊனமிலான், மானமில்லாதுரைப்பதற்கென் செய்வதென்றான். பின்னுந் தமையனுரை நோக்கித் திரௌபதியினுடைய மானபங்கத்தையும், தாங்கள் வரும்பொழுது கானகத்தே பட்ட இடர்களனைத்தையும் பற்றிக்கூறி, அண்ணரே எனக்குச்செலவு கொடுப்பீராகில் அடியேன்சென்று துரியோதனனைக் கொன்று குருகாட்டிற் பாதிமாத்திரமல்ல உமக்கு ஏகசக்கிராதிபத்தியமளிப்பேனென்றான். இவருடையசினமும் மனவாத்திரமும் இன்னமுங் குறையாதிருப்பதினாற் கிருஷ்ணரைநோக்கித் தமையனரைக்குறித்துத் திரௌபதியினுடைய மானபங்கத்தை நீக்காதவரும் எம்முனன்று சூதாடிய சபையில் செய்த சபதத்தை முடியாதவருமாகிய இவருடன் நான் கூடிப்பிறந்ததினாலன்றோ வசையிலும் மானவீனத்திலும் எனக்குப் பங்காகின்றது, என்றும் தூதனுப்பிச் சமாதானங்கேட்டல் இழிவென்றுங் கூறிமுடித்தான்.

இவ்வாறு வெகுண்டு வீமன் கூறியவையெல்லாம் கேட்டிருந்த தருமர், "தம்பி? குற்றமது பார்க்குங்காற் சுற்றமில்லை, யொருநிலத்திற் பிறந்தார்களுடன் வாழும் வாழ்வினைப்போலுறுதியுண்டோ. அவமானமென்றால் பிறரால் பட்டாலன்றோ. கண்மலரிற் கைபடாதோ." அதை வீமன் அசட்டைசெய்யாது கிருஷ்ணரைநோக்கித் தருமருக்கு முன்கூறியதுபோல், துளாய் முடியோனே! நின்பதஞ் சிவப்பத்திருநாடு பெறத்தூது செல்லவேண்டாம். என்னை அனுப்புவீராகில் துரியோதனனைக்கொன்று திரௌபதியினுடைய விரதத்தையும் என் சபதத்தையும் நிறைவேற்றுவேனென்றான்.

இவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் கவனிக்கவேண்டியது என்னவெனில் அவை ஆறு செய்யுட்களிலடங்கி யிருப்பினும் சுருக்கச்சொல்லின் துரியோதனன் நமக்குச்செய்த வஞ்சகங்களியாவற்றையு மறிந்திருந்தும் கானகத்திற் துயரனேக மனுபவித்து வந்தபின்னும் அவனுடன் போர்செய்து வென்று பூமி

ணைப ஆள்வதோடு எங்கள்சபதத்தையும் நிறைவேற்றித் திரௌபதியின கூந்தலையும் முடிக்கத் துணியாததென்றோ, எனக்குத்தரவு கொடுப்பின் நான் முடித்து. வைப்பேனென்பதுவே. ஒரு கவியில் அன்றேல் இருகவிகளில் கூறற்பாலனவற்றைத் திருப்பித் திருப்பிக்கூறியது வீமனுடைய மனநிலைமையை நன்குணர்த்துகின்றது.

வீமனித்தகைய கடுங்கோபங் கொண்டிருப்பதைக்கண்ட மாயவர் தருமனைவருக்கும் மூத்தோராயிருப்பதினாலும், அவருடைய சொல்லிற்கமைந்து மற்றைய நால்வருமொழுகுந் தன்மையை யுடையவராதலினாலும் வீமனுடைய நிலையானது தன்கருத்திற்கிசையப் போரையே வேண்டுவது கண்டுமவரைத்தடுத்துத் தருமரைத் தன்வசப்படுத்தலே யத்தியாவசிய மென்றறிந்து அப்புவியின் முன் பிறந்தோராக முறை, யுரைத்தாலது கேளாமற்

தம்பியரு மறுப்பரோ தலைவ இனிக்கடுங்
கோபந் தணிக வென்றார்.

அருச்சுனன்

இவ்வாறு வீமனையடக்கிய பின்னர் அருச்சுனன் "மானமேபுரப்ப தவனிமேலெவர்க்கும் வரிசையுந் தோற்றமும் மாபுமென்ற மனக்கிடக்கை யுள்ளவனாதலினாலும் திரௌபதிமீது பேரன்புள்ளவனாதலினாலும் தன் வில்மகத்துவத்தை யறிந்துள்ளவனாதலினாலும், "அக்காலம் பொறுத்தவையெல்லா மமையாமலின்னமு மிருந்ததாமே சொன்னாலெக்காலம் பகை முடித்துத் திரௌபதியுங் குழல் முடிக்கவிருக்கின்றாளே" யென்றும் "யாவராயினு மெதிர்த்தோருயிருண வென்றிருப்பதுவே யென் கைவாளி; மீவாராலுகளும் கயற்றருநா டென்னிவண்பாற சென்றுவேண்டுமாறே" யென்றும், "தீண்டாத கற்புடைய செழுந் திருவைத்துகிலுரியச் செயலொன்றின்றி மாண்டார்போலதுகண்டு மன்னவையில யாமிருந்த பாசுதீரவேண்டாமோ' வென்றும், "பொன்னெருந்திகிரியினன் போலும், பொறை வேந்தன் புகன்றவெல்லாஞ் சொன்னாலுமவன் கேளான்" என்றும் கூறிமுடித்தனன். இவன் கூறியவற்றிலிருந்து திரௌபதியினுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானபங்கம் இவளையளவின்றி வருத்துகின்றதெனை விளங்குகின்றது. அருச்சுனனிலும் வீமன் கோபத்தாற் கூடியவனென்றும் அருச்சுனன் வீமனிலும் யூகத்தாற் கூடியவனென்றும் விளங்குகின்றது.

ச. அருள்நந்தி.

## பாவலன் (THE POET)

### Translated From Goethe's Wilhelm Meister

அரிய நண்ப! ஒருவன் முதலாம் முறை வாசிக்கும்பொழுதே அவன் ஆன்மா முழுமையையும் வியாபித்து ஆனந்தத்தைக் கொடுக்கும் ஓர் திவ்விய நூலை, ஓர் பாவலன் தன் உலகமுயற்சியின் இடை நேரங்களில் செய்து முடிக்கலாம் என்று நீர் நம்புவது எவ்வளவு தப்பான எண்ணம்! அப்படியன்று: பாவலன் முழுமையும் தன்னிலேயே சீவித்து தனக்கு ஆனந்தத்தை விளைக்கும் விஷயங்களிலேயே மனத்தைச் செலுத்திவரவேண்டும். பரமகிருபையானது அவனுக்கு விலையுயர்ந்த கொடைகளை இயல்பாகவே அளித்திருக்கிறது. அவன் தன் சிந்தையிற்றானகவே எந்நாளும் பொங்கிவழியும் ஓர் அற்புத நிதியை வைத்திருக்கின்றான். அவன் இந்த நிதியுடன் சீவித்து உலகவிஷயங்களால் மனங்குளம்புதலின்றி, பணச்செலவர் தங்கள் பொருள்கள் எல்லாவற்றினாலும் பெறக் கூடாத சாந்தமான மன நிலைமையில் தனது காலத்தைக் கழிக்கவேண்டும். மனுஷரைப்பார்! அவர்கள் மனத்திருப்தியும் இன்பமுமடைய எவ்வளவாய்ப் பாடுபடுகின்றனர். அவர்களுடைய ஆசையும், பணமும், முயற்சியும் எந்நாளும், எதை நோக்கிக் கொண்டிருக்கின்றன? பாவலன் இயற்கையாகவே எதைத் தன் உள்ளத்தில் வைத்திருக்கிறானே அதற்காகவல்லவா? அதென்ன? மற்றவர்கள் இன்பதுன்பங்களைத் தனதுபோல உணருகிறதும் இயற்கையின் அழகுகளைச் சரியாக அறிந்து அறிந்து அனுபவித்து ஆனந்திக்கக் கூடியதுமான மன நிலைமையேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுஷரை என்னாளும் இடைவிடா இக்கட்டிலும், பண வாஞ்சையிலும் விட்டிருப்பது என்ன? தங்கள் மனநினைவின்படி உலக காரியங்களைத் திருப்ப வலாமலிருப்பதும் உலக இன்பங்கள் அனுபவிக்கும் பொழுதே வற்றிப்போவதும், ஆசைப்படும்பொருள்கள் அவர்கள் தேடியகாலத்தன்றி, அவர்களுக்குத்தேவையில்லாத பிற்காலத்தில் வந்துகிடைப்பதும், தாங்கள் ஆவலாய்த்தேடி அனுபவிக்கும் பொருள்கள், கையில் கிடைத்தவுடன், தாங்கள் முன் காத்திருந்த அளவு இன்பத்தைக் கொடுக்காமலிருப்பதுவுமாகிய இவைகள் அல்லவா? ஆனால் இயற்கையின் ஒழுங்கு பாவலனை இவைகள் எல்லாவற்றிற்கும் மேல் உயற்றி ஓர் பொன்னுலகத்தவனைப்போல் வைத்திருக்கிறது.

அவன் எல்லா மனுஷர்களுடையவும், இன்பதுன்பத்தில் ஓர்பங்கு பற்றுகிறவனாகவிருக்கின்றான். உலக மனுஷன் ஓர் உலகவிஷயத்தின் பொருட்டு மட்டுக் கடங்காத ஆனந்தங்கொள்வான். அல்லது அளவில்லாத துக்கசாகரத்திலமிழ்ந்தி வருந்துவான். பாவலனோ அப்படியின்றி சூரியனானது பகலிலிருந்து இராவிற்கும், இராவிலிருந்து பகலுக்கும், எவ்வளவு சாந்தமாகச் செல்லுகிறதோ அவ்வளவு அமைதியான நிலைமையுடன் இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றான். அவனுடைய இருதயமென்னும் நிலத்திலிருந்து ஞானமென்னும் திவ்விய அழகானபோது மலர்ந்து பரிமளிக்கும் இப்படியாக பாவலன் ஆசிரியனும் ஞானியும் மனிதருக்கும் தேவருக்கும் நண்பனுமாகின்றான். இப்படிப்பட்ட ஒருவனை நீர் பொதுவான உலகவிஷயங்களில் இழுத்தல் எவ்வளவு சரியீனம். ஓர் பட்சியைப்போல் மலையுச்சியிலும், மரக்கொப்பர்களிலும், மலர்களையும் கனிகளையும் புசித்து ஆனந்திக்கும் அவனை எருதைப்போல உலகப்பொருளுக்காகப் பாடுபடவும், நாயைப்போலத்தேடிய நிதியைக்காவல் செய்யவும் செய்யமுடியுமா?

அந்தக்காலங்களில் பாவலர்களின் சீவியத்தை நீ கவனித்துப்பார். தங்கள் இருதயத்திலேயே பெருநிதி படைத்தவர்களாகையால உலகத் தேவைகள் அவர்களுக்கு மிகவும் சிலவேயாம். உயர்ந்த சிந்தனைகளையும், அலங்காரமான உருவகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும், காதிற்கினிமையான சொற்களிலமைத்து மனுஷருடைய உள்ளங்களை மகிழச்செய்யும், அவர்கள் வல்லமை எத்துணைச் சிறந்தது! உலகமெல்லாவற்றையும் ஒருகுடைக்கீழ் அரசாளும் மன்னனும் அவனுடைய பக்களால் ஆனந்திக்கிருன். ஓர் பெண்ணினிடம் முடியாமையையுள்ளவனும் பாவலனுடைய பாக்களையே பாடுகின்ருன் இன்னும் பார்க்கில் தேவர்களை எங்களுக்குச் சிருஷ்டித்துத் தந்தவர்களும் எங்களை அவர்களுடன் பேசப் பழக்கியவர்களும் பாவலா அல்லாமல் வேறியார்?

க. சற்குணசிங்கம்.

---

## சிலமொழி பெயர்ப்புகள்.

### கீற்ஸ் என்ற ஆங்கில புலவனின் கவிகளிலிருந்து

## Translation of Keat's Dedication to Leigh Hunt.

எழில் பலவுந்திகழ்காட்சி எவ்விடத்தும் போய் மறைந்த
வெங்கும் நோக்கில்
அழகுகளும் தீர்ந்தொழிந்த வாதித்தன் குணதிசையிலணையும்
வேளை
எழிலிரையும் நாண்மடந்தை முகமலர்ந்திங் கின்பமுற
நோக்கும் வண்ணம்
களபநறு மகிழ்தூபப் புகைபரவுங் காட்சியையாங்
காண்டிலேமால்,

கன்னல் மொழிபயிலு மிளங்கெதரிவைமார் கூட்டமதாய்க்
காவிற்சென்று
மின்னலிடை மிகவருந்த மல்லிகை சண்பம் முல்லை விருப்
போடாய்ந்து
நன்னலஞ்சேர் பூமாதின் கழல்பணிய விரைந்திடு நாளுெ
ளிதன்றே
இன்னலங்கள் யாங்காணேம இனறெளம் மனநிலைமை
யிருந்தவாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வண்ணம் அழகெல்லாம் ஒழிந்தாலு மெழில்பலவு
மறைந்திட்டா லும்
எவ்வண்ண மிவைகளையா மறந்தாலு மென்னிலைமை
யினியதன்றே
மெய்வண்ணம் நின்ற மனத்த நின் போல்வார் என்பாவை
விருப்பியேற்கில்
அவ்வண்ணம் நினைந்துநினைந் தென்னுரு மகமகிழ்வே
னறிகுவாயே.

க. சற்குணசிங்கம்

## வறுமை மகள்.

எழிலுடை பொருட்கள் யாவும் எந்நிலை யுற்ற போதும்
களிதரும் காணுந் தோறும் கண்டனம் வீதி நீளும்
வழியினில் ஏகிக் கொண்டும் வழங்கிடும் ஐய முண்ணும்
செழிகுழன் மடந்தை யொன்றாற் சிறந்தது வீதி மாதோ!

கரந்தனில் வீணை தாங்கிக் கவினுடைக் கோலங் காட்டி
பரந்தெழு கொங்கைப் பண்பைப் பார்ப்பவர் மனமும் நைய
சிரந்தனில் கதிரோன் வீசும் சீறனற் பட்டுச் சோர்ந்தும்
இரந்தனள் வீடு தோறும் இறைவனென் றொருவ ரில்லாள்.

கந்தையு மணிந்து மற்றக் கந்தையி னூடே தோற்றும்
சுந்தர மேனி யெந்நாட் சுகமுறு மென்றே யெண்ணிச்
சிந்தனை யோடே சென்றார் சிலருந்தம் வீதி வாய்முன்
வந்தனர்; வந்து சென்றார் வறுமையின் அழகு காணார்.

வேறு.

குன்றாத ஒழியுடைய கூர்க்கண்கள் கண்டனர்யார்
என்னாளும் மறப்பரோ ஏந்திழையர் நோக்கம் அவர்
அன்பாகு மாழியில் ஆழ்த்திடுமோ ற்றல் தோன்றுவாடி
இன்பாக ஈமின் என்றிரப்ப போன்றவட் கண்ணுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தை யடைந்து மஃதின் பண்புடைக் கணவனில்லா
வருத்தமே சிறிதுந்தோற்று வறுமையென் கொடுநோய்ப்பட்டு
தருமினோ எமக்கே தேனுந் தஞ்சம்வே றில்லென் றண்ணல்
அருளையே வேண்டிப்பாடும் அரிவையின் இனியஓசை.

கேட்டனர் ஆங்குநின்றோர் கொடுத்தனர் கீதங்கேட்டு
வாட்டமுற் றிதுவோ வாழ்வு வாழ்வினின் நோக்கமென்றே
பாட்டினால் நிதமும் போற்றிப் பரமனை வணங்கினாலும்
கேட்டில னவனை யென்றே கேட்டனம் மாந்தரென்றார்.

வேறு

செல்வரா யங்குநின்றோர் சென்றனர் சிறிதும் நோக்கா
அல்லரா யானோ ரன்றோ ஆர்வமுற் றளித்தா ரென்றால்
பல்வகைப் பொருளு மாளும் பாதக ரவரின் நெஞ்சங்
கல்லினுங் கடிய தாமே கடவுளு மிவர்க்கே யென்பாய்.

அண்ணலைக் கூவி யென்றும் அலைகின்ற மின்னே யுன்னை
மண்ணினிற் றோற்றுவித்து மட்டில்லாத் தொல்லை யிங்கேதான்
தண்ணளி யுடையனோமோ தன்மை பொருளினென்றும்
வண்ணினை வறுமையாலே வாடென விதித்தானென்றால்.

வானார் விளங்குவரையிற் சோதி தொடங்கி வான்கீழ்
ஊனார் உடலுமுணர்வு மொன்றுமுயிர்கள் ஈறாய்
ஏஞ்சென்றறியா தியங்கல் கண்டும் எல்லாம் மேலாக்
சோனாவொம் மேற்கருணை சொல்லாதென்னே!

வாடிடும் மலர்களினும் வடிவழ குடையதாமே
வாழிடும் மக்களென்றும் வடிவுடனறிவைக் கொண்டார்
தேடிடலெங்குங் காணாம் தெரிந்தில மீதின்நோக்கம்
நாடிநலங்கள் நம்முள் நவிந்ததை நாடாதென்றே.

கங்குலின் மறைவை நீக்க மதியினின் கதிருமுண்டே
பொங்கனற் காங்கை தீர்க்கத் தண்பொலி நீருமுண்டே
எங்கணும் ஞாலமுற்றும் எண்ணில துன்பந்தீர்க்க
மங்கைபாம் மார்கம்காணேம் மாயமீதென்னே வென்பாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

அல்லும் பகலும் ஐயன் அருளினை யழைத்துமுன்போல்
தொல்லைக்கடலின் கரையடையத் தியங்கு முன்னோர்
எல்லைகடந்த கருணையுட னேற்றுக் கொண்டம் மினிய
சொல்லெனுந் தேனிசைந் தூற்றச் சோகத்தின் கைப்புநீங்கும்.
தான்வரிக் காதல்தன்னைத் தானடையாமற் றாழ்ந்து
ஊன்மலி உடலைநீக்க உவந்திடு மக்கள்நாடும்
வான்வரைச் செல்வம்வைத்த வாழ்வுடைச் செல்வர் வேண்டார்
பான்மைய இயமனிங்கு பற்றிடுவரைக்குந் நிற்பாய்.

மு. பாலசுந்தரம்.

---

## என்னே நுந்துயிலின் பெருமை!

கக்குலென் சலத்தின் வான்மீன கலைந்திட எறிந்தான் கல்லை
எங்கணும் துலங்க நின்ற இன்புடை விடியற்காலம்
செங்கதிர் வலையால் மற்றுச் சூழ்ந்தனன் பானுராசர்
தங்கிடும் மனையை என்னே தாமதம் எழுதற்காமே?

(Omar Kayam. மு. பா.)

சகோதரரே! பொழுதுவிடிந்தது! கோழிகளும் பூங்குயில்களுங் கூவிவிட்டன இனனுந்துயிலா? அயலவரெல்லாந் துயில நீத்துத் தத்தம் அவ்வந்நாட் காரியங்களைச் செவ்வனே நடாத்துகின்றார்கள். இந்தியமாதாவும், அவளது குழந்தைகளும், அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து கானம் பாடிக் களிக்கின்றார்கள். சூரியன் தனது கதிர்க்கற்றைகளால் நும்முடம்பைக்காய்ச்சியும் இன்னும் எழுந்திருக்கவில்லையே! உணர்விழந்துகிடக்கின்றீர்களே! யாரேனும் மயக்கிவிட்டார்களா?

சகோதரரே! இந்தியமாதாவின் தெய்வக்குழந்தைகளினது மதலை மொழிகளையாகிலுங் கேட்டின்புற விருப்பமில்லையா? அக்குழந்தைகளின் இனியகானங்கள் நுமது மங்குமான செவிகளுள் நுழையவில்லையா? இருகாதுகளும் மந்தமா? ஏதென்னே! கண்டவர் பழிமொழிக்கிலக்காகுகின்றீரோ? சிறுவர்களுட் சிலர் தாய்மடியிலிருந்து விளையாடுதலையும், சிலர்தமைப்பெற்றதாயார்க்குஞ் சகோதரர்க்கும் விளைகின்ற இன்னல்

களிளையெல்லாங் குஞ்சரக்கன்றுகள்போல் நின்று தீர்ப்பதற்கு எழுந்து கொடிகட்டி நிற்பதையும்பாருங்கள்! தெய்வச் சிறு குழந்தையொன்று தாழ்சடையுடன் கிழவனைப்போல் நின்று தாயானவள் ஆசிகூற இனிய கீதங்களும் மதுர வசனங்களும் பொழிகிறான்! இதையாகிலும் எழுந்துபாருங்கள்! சிறுவனுங் கிழவனது தாழ்சடையைப்பற்றிக்கொண்டு ஆசிரமத்துள்ள குழந்தைகளெல்லாம் மான்கன்றுகள்போலத் துள்ளித் துள்ளித்திரிவதைப் பார்த்து நுங் கண்களும் மனங்களும் ஒருங்கே குளிரவில்லையா? "தாகூர்" எனும் பெயரிய இப்பெரிய கிழக்குழந்தையின் பாடல்களும் மதுரமொழிகளுமாகிய பேரானந்தக்கடலிலே மூழ்கி உஙகள் மயக்கத்தையொழியுங்கள்! இவனன்றோ இவன் தாயின் சற்புத்திரன் இத்தகையபுத்திரரையன்றோ நொந்துந் தவங்கிடந்தும் பெறல்வேண்டும். இவனதுபாடல்கள் அயலவர்களினது மனங்களையெல்லாங் களிக்கச்செய்வதைப்பார்க்க இந்தியமாதா எத்துணைப் பேரானந்தம் உறுவாள்! இம்மாதாவன்றோ பாக்கியசாலி!

ஐயகோ! சகோதரரே!

இன்னும் நித்திரையா? எழுந்துபாருங்கள்! இந்திய மாதாவின் மற்றையபுத்திரரின் ஆடல்களை! உடம்பெல்லாம்மெலிந்து தனது சகோதரருந் தாயுமடையுந் துக்கங்களால் மன நலிந்து தனதரையிலேமாத்திரம் ஒரு சிறுதுண்டுடுத்தி அகிம்சைநோன்புநோற்கும் காந்திச்சிறுவனை! தன்னுருயிர்ச் சகோதரர்களுக்குந் தாய்க்குமாகச் சுயநலஞ் சிறிதுமின்றி அரசினராற்கைதிசெய்யப்பட்டு மறியற்கூடஞ்சென்று வந்த பெருமானை! இப்பெருமானின் சகோதரரைப் பாருங்கள்! சிலர் இவனுடனே சேர்ந்து தாய் சகோதரரினுடைய பெருமையும் நன்மையும் விரும்பிச் சுயராச்சியம் பெறுதற்காக வுழைக்கின்றார்கள்! சிலர் கல்வியெனும் பெருங்கடலின் பலவேறு துறைகளினுந் தீரராயிருக்கின்றார்கள்; சிலர் இம்மைச் சுகமெல்லாந் துறந்து மறுமைப் பயன் விரும்பித் தவசிரேஷ்டராயிருக்கின்றார்கள்! இவர்களைப்பாருங்கள்! அவரிடமிருந்து கற்கவேண்டியதைக் கற்றுக்கொள்வதற்கு நித்திரை விட்டெழுங்கள்! என்ன செய்கின்றீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏது? எழுந்துவிட்டீர்களா? இனி என்செய்யப் போகிறீர்கள்? இதுகாறும் துயில்வதேகருமமாக விருந்தீர்கள்! இனி உங்கள் குடும்பிகட்கு இரைதேடும் நோக்கமாகப் பணந்தேடப்போகிறீர்கள்! பணந்தேடுவதற்கேனும் சரியான வழிதெரியாது விழிக்கின்றீர்கள்! சிறிது ஆங்கில பாஷையை மாத்திரங் கற்றுக்கொண்டு அரசினரின்கீழ் ஏதோ வழியாகக் கந்தோர்களென்னும் கற்கட்டிடங்களில் நுழைந்தோ அல்லது வேறு யாதேனுஞ் சாமானிய வேலைகள் செய்தோ சம்பாதித்து விடலாமென்றே பார்க்கின்றீர்கள்! ஏதோ இன்றையபசி தீர்ந்தாலே போதுமானது எனகிறீர்களே! இப்படியாகப் "பழையகந்தனே கந்தன்" என்று எப்பொழுதும் நீங்கள் அரசினர் வேலைக்காரராகத்தானிருப்போமென்ற வாக்கு தவறவிட விருப்பமில்லையா? ஏன்? "வறுமைப் பாழ்பிணி" யாற்றமாட்டாது பிறருக்கு வேலைக்காரர்களாய் இருப்பவர்கள் தவிர மற்றவர்கள் தூர தேசங்களுக்குச் சென்று பலபல கைத்தொழில்களும் வேறு முயற்சிகளும் கற்று வந்து நந்தேசத்திலுள்ளவர்கட்கு அக்கல்வியைப் புகட்டி நந்தேசத்திலே அவ்வகைத்தொழில்களை விருத்திசெய்யக்கூடாதா? கந்தர் மகன் சுப்பர் மோட்டோர்வண்டிவாங்கிக் கூலிக்கு யாழ்ப்பாணச்சவாரி செய்து பணஞ் சம்பாதித்தால் முருகர் பூதப்பிள்ளையும் அப்படித்தான் பணஞ் சம்பாதிக்கவேண்டுமா? அடுத்தகிராமத்து அம்பலவன் மகன் அம்பாளுக்கு ஆடு பலியிட்டு ஐம்பதினாயிரம் பொன் பெற்றுவிட்டதால் நீருமப்படி பெறுவீரென்று நிச்சயஞ்செய்து விடலாமா? ஐயோ! இலங்கையின் விஸ்தாரமென்ன? காடடர்ந்து கிடக்கும் பல நூற்றுக்கணக்கான 'பரப்பு' நிலத்தை வாங்கிப் பண்படுத்தி எங்கள் சாப்பாட்டுக்கும் உடைக்குமத்தியாவசியகமான பயிர்களை ஏன் உண்டுபடுத்தக் கூடாது?' அப்படிச் செய்தாலும் ஓரேமுறையில் உங்கள் பேராவாவைத்தீர்க்கும் அளவு விளைவு இல்லாவிடில் "இந்தவேலையும் வேண்டாமப்பா" என்று தொலைத்துப்போட்டுக் கந்தோருக்குள் நுழைந்து "ஐயா ஐயா" என்று பலமுறை சொல்லிப் பத்துப்பணமுழைத்தாலும் போதும் என்று நிற்கிறீர்களே! நும் மந்தபுத்தி என்னே!

இது நிற்க சகோதரமே! 'இருந்தவன் இருக்க நடந்தவன் காதவழி' என்று நம்மூரார் சொல்வது புலனாகாதிருப்பதெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்னே! "பாட்டப்பா பதினாயிரம பவுண் சேகரித்து ஒருபெரிய தோட்டம் வாங்கி அதிலே பலவகைப் பிரயோசனங்களையும் தருமபடியான மரங்களையுமுண்டாக்கி, ஓர் அழகிற்சிறந்த மாளிகையுமமைத்து விட்டு, பரலோக பிராப்தியானார்" என்று தற்போதைய வெறுவிலி ஒருவன் சொல்லி ஆனந்தித்துக்கொண்டு திரியலாமா! அவருடன் சேர்ந்து நீங்களும் சந்தோஷம் கொண்டாடுவீர்களா? இவனது பாட்டப்பா பதினாயிரம் பவுண் வைத்திருந்தது எமக்கும உங்களுக்கும் என்ன வழியாகத்தெரியவரும்? அப்படியாகத்தானும் இவன பாட்டனாது தோழரெவரேனும் இருந்து இவன் சொல்வதை உறுதிப்படுத்தினாலும் இப்போது இவனிருக்கும் பரிதாபநிலை என்னே! இவனைப் பணக்காரப் பாட்டனாது பாட்டன் என்று சொல்வதற்கு இடமில்லையே. குடிக்கக் கஞ்சிக்கும் உடுக்கக் கந்தைக்கும் போதிய நிலைபரமற்ற வெறுவிலியைப் பணக்காரப் பாட்டனாது பாட்டன் என்று சொல்வதெங்ஙனம். இதைப்போலவே நீங்களும் நமது முந்தையோர் எல்லாம் அறிவிலுங் கீர்த்தியிலுஞ் சிறந்து விளங்கியவர்களென்றும் சாலவுஞ் சிறந்த சீர் திருத்தமடைந்தனரென்றும் அவரால் செய்யப்பட்ட சாஸ்திர நூல்களும் பாவினங்களும் தற்காலமுற்ற மிகச்சிறந்த சாஸ்திர நூல்களினும் பாவினங்களினும் சிறந்தனவென்றும் வாய்ப்பறையறைந்து திரிதலே தொழிலாகி நின்றூற் போதுமானதா? பார்த்தவர்கள் "அந்தக் கொடியல்லவோ, அக்கொடியிற் காயல்லவோ" என்று சொல்லத்தக்கதாயன்றோ விருக்கவேண்டும். பாட்டிக் கிழவிகளுக்கு இவ்வித பழங்கதைகளை விட்டு நீங்கள் நம்மாலே இயலும்பொழுது இயன்றபடிக்கு நம்மினுங் "கற்றோரை நோக்கிக் கருததழிந்து," நமது தாய்நாட்டிற்கும், நமதுசகோதரருக்கும், நமது சாதியாருக்கும் என்றுமழியாத பெருமையை உண்டாக்கக் கூடிய செயல்களையன்றோ செய்தல் வேண்டும்.

ஐயோ! சகோதரரே! சற்றுநேரம் ஊன்றியோசித்துப்பாருங்கள்! உலகத்தவர் பலரும் மெச்சக் கூடியவண்ணமாக யாதானுமொரு சிறு காரியத்திலென்றூலும் வல்லமையுடையராயிருக்கின்றீரா? விவசாயத்திலா, கைத்தொழிலிலா, சாஸ்திரவாராய்ச்சியிலா, இலக்கணவிலக்கிய நூற்பயிற்சியிலா அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாவற்றினும் அதி மேம்பாடுடைய ஆத்ம ஞானத்திலா? இவை யொன்றினுமில்லையெனவே உண்மையாகத்தோன்றுகிறது. ஆனல் "நாம் முற்காலச் சமயகுரவர்கட்கும் நாயன்மார்க்கும், பெரிய பெரிய அரசர்க்கும் வழித்தோன்றல்களாயுள்ளோம்." என்று வாய்ப்பறையறைந்து வீணுள் கழிப்பது புத்தியாகுமா? "அண்ணர் வருமளவும் அமாவாசை காத்திருக்குமா!" "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" இதுவே தருணம்! இன்னும் பாராமுகமாயிருப்பதேனே? இலங்கை மாதாதனக்கும், நுஞ்சகோதரர்க்கும் நும் பாஷைக்கும், நுஞ்சமயத்திற்கும், அரிய பெரிய திலகங்களாய் நீங்கள் விளங்கவில்லையே யென்று நொந்தழுவதைச் சற்றேனும் நோக்காதிருப்பதென்னே!

"எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும் வரை யுழைமின்! அறிமின்!"

ச. சுந்தரமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராக்காலம்.

மானிடர்கள் தாங்கள் பிறக்கும்பொழுது, தங்களைச்சூழ்ந்திருந்த இயற்கை விநோதங்களை விட்டு, தாங்கள் உண்டாக்கிய யந்திரங்களையும், சாஸ்திர வல்லமையினால் கண்டடைந்த விஷயங்களையும் பெரிதெனக் கொள்கின்றார்கள். அநேகர், மரஞ்செடிகளிலும், ஆறுகளிலும், சூரியசந்திரர்களிலும் உலகத்திலேயுள்ள எல்லாப் பொருள்களிலும், ஆர்வம் வையாதும் அவைகளிலிருந்து தம் சீவியத்தைச் சீர்ப்படுத்தும்வகை அறியாதும் உலகவாழ்விற்கு ஏற்றதும், உலகத்துன்பத்திற்கும் இன்பத்திற்கும் காரணமாயிருக்கின்றதுமான விஷயங்களைப் பெரிதாக எண்ணி வருதலே, மானிடமுன்னேற்றம் என்று சொல்வார்கள்.

அத்தகையோர் இராக்காலம் யாதுகாரணம்பற்றி நேர்கின்றதென்றும் எந்த நட்சத்திரம் எவ்விடத்திலிருக்கின்றதென்றும் அறிய விரும்புவார்கள். அவர்கள் ஒரு பூவைக்காணும்பொழுது அதில் எத்தனை இதழ்களிருக்கின்றனவென்றும், ஓர் மிருகத்தைக் காணும்பொழுது அதை வெட்டி எத்தனை விலா எலும்புகளிருக்கின்றனவென்றும் அறிய எத்தனிப்பார்களேயன்றி, அப்பூ, தம்மனத்தில் எவ்வகையான எண்ணிறந்த எண்ணங்களை உண்டாக்குகின்றது; அம்மிருகம் கானகந்தோறும் திரிகின்றதே! அதற்கும் மனிதருக்குமுள்ள சம்பந்தமென்ன? அது இப்பூவுலகின் சிறப்பிற்கு என்னவிதத்தில் தன் பாகத்தையளிக்கின்றது என்று சிந்தியார்கள். அவர்கள் ஆராயும் அறிவும பயனுடையதுதான். ஆனால் இது இன்றியமையாததல்ல. மனத்தை வளர்த்து உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் ஆர்வம் வைக்கும் தன்மை பெற்று மனோபாவனையை நன்கு செலுத்திப் பேரின்பம் நல்கும் அறிவே மானிட உருவெடுத்தோர்க்கு வேண்டியதாகும்.

இவவகையான உள்ளக்கிளர்ச்சியை உணர்வதற்குத் தக்க காலத்தில் தகுந்த நேரம், இராக்காலமே. இவ்வறிவு வளர்ந்து வருவதற்கு இயற்கைப்பொருள்கள் யாவும் மனிதருடன் ஒருங்கு நிற்கவேண்டும். பகல்நேரத்தில் ஓட்டமுமாட்டமுமாயிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கின்றது. சூரியன் பிரகாசித்ததும் உலகத்தின் ஆர்வம் பெருகும். சூரிய உதயத்தைப்பற்றி முற்காலத்துப் புலவர்கள் மிக வியந்து கூறியிருக்கின்றார்கள்.

புலர்தன கங்குற்போதும் பொழிதரு பனியும் சோர
மலர்ந்தன மனமும் கண்ணும் வயங்கின திசையும் பாரும்
அலர்ந்தன தடமும் காவும், ஆர்த்தன புள்ளும் மாவும்
கலந்தன குருகும் பேடும் கலித்தன முருசுஞ் சங்கும்.

என்று வில்லிபுத்தூரார் சொல்லுகின்றார்.

நாங்கள் உண்டாக்கிய பேய்கள் உலக உண்மையை மறைக்கின்றன. நாங்கள் உண்பதும் உடுப்பதும் உறங்குவதுமே வாழ்வென்றும் புத்தகங்கள் படிப்பதே அறிவென்றும் நாங்கள் அறிவிற் சிறந்தவர்களென்றும் எண்ணி வீண்காலம் கழிக்கின்றோம்.

பகல் முழுவதும் தங்களை நினையாது இச்சனங்கள் திரிந்தார்களே, இம்மரத்திலிருந்து பாடும் பட்சிகளின் ஓசையைக் கேட்டார்களா? அவர்களையும் தங்கள் யந்திரங்களினால் கலசகிவிட்டார்கள். இப்புஷ்பங்கள் அலர்ந்து தங்கள் எண்ணங்களை வெளியிட ஆவலாயிருந்தன. ஒருவராவது அவைகளின் பேச்சைக் கவனிக்கவில்லை இன்னும் சிறிது நேரம் நான் நின்றால் மனிதர் கதி என்னவாகுமோ வென்றெண்ணிச் சூரியன் மறைகிறான். அவனித்துக்கத்துடன் அலங்காரமாய்ச் செல்வதைக்கூட இப்போ மானிடர் பார்க்கின்றார்களில்லை

ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பரந்திருக்கின்றன பூரணசந்திரன் தன் நிலா வெளிச்சத்துட ஆகாய முழுவதிலும் சொலுசெலுத்துகின்றான் பட்சிகளும் மிருகங்களும நாள் முழுவதும சூரியப் பிரகாசத்தில் மூழ்கி இன்புற்றுப் பின் ஓர் அல்லலுமில்லாது செடிகளிலும் கூடுகளிலுமுறங்குகின்றன. சகல சீவசெந்துக்களும் சந்தோஷத்தில் ஆழ்ந்திருக்கின்றன,

எல்லாப்பிறவிகளிலும் மேலான பிறவி மானிடர்கள். அவர்கள் பகல் முழுவதும் தங்களைச் சூழ்ந்திருக்கு மியற்கை விநோதங்களை விட்டு வயிற்றுப்பிழைப்பிற்காகத் திரிகிறார்கள். இனியாகுதல் ஆறலாகாதா? தங்கள் மனோதத்துவங்களைப்பற்றிச்சிந்திக்கக்கூடாதா? இல்லை. சந்திரன் உலகத்தோற்குக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் புன்னகை கொண்ட முகத்தைக காட்டுகின்ருன். அவர்கள் மின்சாரவெளிச்சத்தைப் போட்டு வீடுகளுக்குள்ளே இருக்கிருர்கள். வாசம்நிறைந்த தென்றல்வீசுகின்றது. அவர்கள் அதை அனுபவியாதிருக்கிருர்கள். பிரபஞ்சம் தன் உண்மைகளை வெளியிட ஆயத்தமாயிருக்கிறது. அதை வேண்ட மனிதரோயில்லை. இயற்கையின் பாஷையைக்கேட்க அவர்களுக்கு நேரமுமில்லை, சிந்தையுமில்லை. கடைசியில் தூக்கம் வருகிறது. அவர்களும் உறங்கத்தான் வேண்டும். எல்லாச் சீவபிராணிகளும் உறங்குகின்றன. சூரியப்பிரகாசத்திலும் பார்க்க இது எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும் காலம். இயற்கைத் தோற்றங்கள் யாவும் ஒரேமனமாய், உறங்குகின்றன. இந்நேரத்தில் அன்பினல் ஏவைப்பட்ட மானிடர்களே விழித்திருக்கிருர்கள். அவர்கள் இயற்கைப்பொருள்களுடன் ஒருமித்திருப்பதற்கு இதுவே,தக்கதருணம். சஞ்சலமுள்ள மனம் தன் சஞ்சலத்தை வெளியிட்டு ஆறும் தினமும் இதே. ஆரவாரமில்லை, சஞ்சடி இல்லை. அனந்த வெளியில் அற்புத நிர்ச்சத்தமிருக்கிறது.

இத்தருணத்தில் சாப்பாடில்லாது வருந்தும் வறியோர்கள், தங்கள நிலைமையை நினைந்து துக்சப்படுவார்கள். உலகத்தில் பணம் சொற்ப மனிதரிடத்திலேயே தங்கியிருக்கிறது. இதற்கு என்ன காரணம். இவ்வகை அநியாயத்தை நீக்குவது செல்வர்களுடன் போர்புரிந்தே.

வேருருவர் "நான் சாதியில் குறைந்தவனென்று எல்லோரும் புறக்கணிக்கிருர்கள். ஆனல் தங்கள் நாய்களுடன் விளையாடுகிருர்கள். நாம் என்ன, நாயிலும் குறைந்தவர்களோ! ஆ! கடவுளே! இப்பூவுலகவாழ்வு செல்வருக்குமட்டும்தானே, விதியே! விதியே!! என்று புலம்புவார்.

தன் சகோதரர் படும் துன்பத்தைக்கண்டு அவர் துக்கத்தில் உணர்ந்தவாலிபன் இவைகளை நீக்குவதற்கு வழி யோசிக்கின்ருன் மனோபாவனையை நன்கு விளங்குபவர்கள் வாலிபர்களே. அவர்களே பொதுச் சனங்களின் துக்கங்களையும் சந்தோஷங்களையும் நன்குணரத்தக்கவர்கள். உலகத்தில அக்கிரமம் மேற்கொண்டிருக்கிறது. கோவில்களில வேதம் தெரியாத பிராமணர், விஷயம விளங்காத மனிதர்களை அனுப்பி வயிறு வளர்க்கிருர்கள். அப்படிச் சமயம பாழாயிற்று. வறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர்களும், வருத்தம் பிடித்தவர்களும் கிடந்து தியங்க, திருவிழாக்களிலும் வாணவிளையாட்டுகளிலும் விவாகக்கொண்டாட்டங்களிலும் எவ்வளவு பொருளை மனிதர்கள் செலவு செய்கிறார்கள். மனிதனிலும்பார்க்க கோயில் ஒன்றுண்டா? பரோபகாரச்சிந்தனை அற்றுப்போயிற்று. "கீழ்ச்சாதியார்" என்று அறியாமையுள்ள மேன்மக்கள் பிதற்றித் தங்கள் சகோதரர்களை அவர் பிறப்பு உரிமையினின்று விலக்கிவிட்டார்கள். சீவகாருண்ணியம் அழிந்தது. அந்நிய நாகரிகம் எங்கள் நாட்டைக் கைக்கொண்டிருக்கிறது. அந்நிய அரசர்கள் எங்களை ஆள்கின்றார்கள். தேசமகிமையும் அழிந்தது என்று தனக்குட் சிந்தித்து இந்நிலையை நிவிர்த்திசெய்யத் தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றான். சமயம் பாழாயிற்று, பரோபகாரச்சிந்தனை அற்றுப்போயிற்று. சீவகாருண்ணியம் அழிந்தது. எங்கள் நாகரிகம் கெட்டது. இக்கதியைத்தீர்க்க எத்தனம்செய்தல் ஒவ்வொரு வாலிபரின் கடனே. இராக்காலமே! இவ்வறிவையும் நீயே கொடுத்தாய்

உண்மையையறியவேண்டுமென்று ஆவலாயிருக்கும் இளைஞன் உண்மையை என்னவிதமாக அறியலாம். பூரணசந்திரனைப் பார்க்கின்றோம் ஆனால் சூரியப்பிரகாசமோ எங்கள் கண்களை மயக்குகிறது. சூரியனுடைய வெளிச்சத்தை எவ்வகையாகச் சந்திரன் மானிடருக்கு, சந்தோஷத்தையும், குளிர்ச்சியையும் கொடுக்கச்செய்கிறதோ, அப்படியே ஓர் குரு தன்சீஷன மனத்தைப்பகட்டிய உண்மையை ஐயாற விளங்ககக்கூறுவான், என்று சிந்தித்து ஓர் குருவின் பாதத்தைத் தேடல்வேண்டுமென்று முடிவுசெய்கிறான்.

தலைவனைப் பிரிந்த தேவி அவனை நினைத்துப் பெருமூச்செறிந்துகொண்டு இருக்கிறாள். இவள் பெருமூச்சு காமனோடு கலந்து அவனுடைய எண்ணங்களைக் கூறுமோ?

வேறொரு இடத்தில் ஓர் நந்தவனத்தில் இரு காதலர் உலாவிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் எப்போ சூரியன் அஸ்தமிப்பான், எப்போ தங்கள் இயற்கை அமைப்பிற்கு வருவோம் என்று ஆவலுடன் இருந்தார்கள். இராக்காலமானதும் பகல் முழுதும் இருந்த பரபரப்பும், சஞ்சலமும் முடிந்ததும், இவர்கள் இச்சோலையில், விதானமாகிய வானத்தின்கீழ், ஓர் சச்சர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுமில்லாது, பூரணசந்திரனைப் பார்த்துச் சந்தோஷித்து, சூழ்ந்திருக்கும் புஷ்பச்செடிகளைக் கண்டு களிகூர்ந்து, ஆகாயத்தின் நீலம், சமுத்திரத்தின் நீலத்துடன், தங்கள் மனம் எவ்வாறு கலந்ததோ, அவ்வாறு கலக்கக் கண்டு இக்கிர்ச்சதகத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இவர்களிருவருக்கும் உலகமுழுதும் மற்றவரிலேயே தங்கியிருந்தது. இவர்கள எங்கும் சந்தோஷத்தையும் அழகையுங் கண்டார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள துக்கங்களையும், தங்கள் நோக்கங்களையும், தாங்களொருவரையொருவர் நேசித்துவந்த விதத்தையும்பற்றிக் கூறினார்கள். சொற்பநேரத்தில் ஒருவருடைய இருதயத்தை மற்றவர் கைக்கொண்டுவிட்டார். தேவர்களின் சீவியகாலத்தில் இருந்து சில நாளிகைகள மக்களின் வாழ்நாட்களில் அன்புவடிவாகவருவதென்றும், இவ்வுலகில் எல்லாக்காரியங்களுக்கும் அன்பே காரணம் என்றும், தாங்கள் ஒருவர்மேலொருவர்வைத்த காதல் பேரன்பாகவளர்ந்து, அருளாகமாறி மானிடர் எல்லாரிலும் வைக்கத்தக்கதாக வருமென்றுஞ் சொன்னார்கள்.

இப்படியாக இராக்காலத்தில் வறியவர்களும், ஏழைகளும், காதலர்களும், தேசஊழியர்களும் என்ன விதமாகச்சிந்திக்கிறார்கள். எல்லாரும் அன்பால் ஏவப்பட்டு தங்களைத்தாங்கள் அறியும் சக்தியைக்கோரி இயற்கைக்குக் கிட்ட வருகிறார்கள்.

இராக்காலமே! மனிதனுக்கு உன்னிலும்பார்க்கப்பெருந்துணையுண்டோ: நீயேமனிதனுக்கு உண்மையை ஊட்டுகிறாய். உண்பது, உடுப்பது தொழிலாகக்கொண்ட லோகாயுதருக்கு இளைப்பாறுதல் கொடுக்கிறாய், சஞ்சலத்தில் தேறுதல்சொல்லுகிறாய்; அன்பை வளர்க்கிறாய்; மனிதனை நினைக்கச்செய்கிறாய். நீயே அவர்களை எல்லாங்கடந்த பரம்பொருளுக்குக்கிட்டக்கொண்டுவருகிறாய். இதுவே உன் பெரும்மகிமை.

இப்போ இருக்கும் மனிதர் முற்காலத்தில் இருந்தவர்களிலும்பார்க்கக் கூடச் சந்தோஷமனுபவிக்கிறார்களா? தற்கால நாகரிகம் ஓர் எள்ளளவேனும் எம்மைச்சந்தோஷிக்கச்செய்கிறதா? இல்லை.

எல்லார்க்கும் கவி, வசன நடையிலும் முந்தியதென்று தெரியுமோ. அதன் கருத்து முற்காலத்தில் மனச்சந்தோஷத்தினால் மனிதர்பாடினார்கள் என்பதுதானே. பட்சிகள்பாடுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷமிகுதியால், நீர அருவிகள் பாடுகின்றன. மேடையில் வீசுங் காற்றுப் பாடுகின்றது. நாங்களோ சந்தோஷமின்மையால் வசனநடையில் பேசுகிறோம். மெய்ச்சந்தோஷம் வேண்டுமாயின் நாங்கள் திரும்பவும் இயற்கைப் பொருட்களை யறியவேண்டும். ஆறுகளிலும, சூரிய சந்திரர்களிலும், மீன்கள் துலங்கும் ஆகாயத்திலும் ஆண்மை தங்கிய சமுத்திரத்திலும் காதல் பெருகும் நந்தவனத்திலும், கமலம் அலர்ந்த தடாகத்திலும், மானிலும், மனிதரிலும், உலகத்திலேயுள்ள எல்லாப் பொருட்களிலும் ஆர்வம் வைத்து அவைகளில் பரம்பொருளைக்காணவேண்டும்.

இங்ஙனம்.

சோ. நடேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் சாற்றியவாறு, நாம் அறிவுவளர்ச்சியை விரும்புவோமாயின, பொருட்களின் பல தோற்றத்தையும் ஆய்ந்துணர்ந்து, அவற்றின் மெய்த்தோற்றத்தையே கைப்பற்றல் வேண்டும். உலகத்திற் பலர் ஒவ்வொரு மெய்ப்பொருளைக் குறித்துப் பலவித ஆராய்ச்சிக்கண் சென்ற போதிலும், தாம் தாம் தேடிச்சென்றதைக் கண்டபோதிலும், இவையெல்லாவற்றிற்கும் தலையாய் நிற்கும் பரம்பொருளாகிய மெய்ப்பொருளை யெளிதில் கண்டுகொள்ளார். அதைக்கண்டும், பிறர்க்குக் காட்டியும் வைக்குமனுபவம், கிறீஸ்து, இராமகிருஷ்ணர், பௌத்தர், மகமது ஆதிய இவர்போன்ற மகான்களாலேயன்றி, மற்றைச்சாமானிய மக்களாற் பெறப்படாது. இத்தகைய மகான்களே, அந்த "இரவு பகலில்லாவிடத் தேகமாய் நின்ற" பேரொளியைக்காண அளவற்ற சிரமமெடுத்துப் பெறற்கரும் பேற்றைப் பெற்றுத் தத்தம் ஆன்மாக்களுக்கு உறுதிப்பயனைத் தேடிக் கொண்டனர். அதுவுமன்றி மன்னுயிர்களுமப்பெற்றியை யெய்தற்கேற்ற வழிவகைகளை ஒழுங்குற வகுத்தனர். இவர் தம்மார்க்கத்திலெவ்வாறுழைத்தனரென்பது எல்லாராலும் ஆராயற்பாற்று,

வைதீக ஒழுக்கங்களைக் கைப்பற்றிச் சமயவிடயமாக உழைத்தவர்களுள் மாணிக்கவாசகர் ஒருவர். அவருடைய சரித்திரமும், பாடல்களும், எவர்க்கும இன்பம் பயப்பன அவர் தன் சமய முன்னேற்றத்தை விரும்பி யெடுத்த சிரமமும். அவருடைய கனியிலும் கனிந்த பாடல்களும், அவருடைய பெயரையும் புகழையும் எங்குமொலிக்கச்செய்கின்றன. அவருடைய வரலாற்றைத் தொகுத்துக் கூறி, அவருடைய பாடல்களின் சிறப்பையும ஒருவாறு விளக்கி, தன் மதத்தை எங்ஙனம் ஸ்தாபித்தாரென்பதையும் எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் முக்கியநோக்கம் "விடயம பொதுவிடயமாயிருக்கிறமைத, இது சஞ்சிகையில் பிரசுரஞ்செய்தற்குத் தகுதியுடையதனறு" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நண்பர் ஆக்ஷேபிப்பர் அதற்குத்தரமாக, சகோதர சகோதரிகளே! நாயிப்பெருந்தகையினருடையசரிதையை நாவார வாசித்தும், காதாரக்கேட்டும், அவருடைய பாக்களைப் பன்முறையிசைத்தும், எங்கள் ஒழுகலாற்றினைச் சற்றேனும் திருத்திக்கொள்ளாமையால்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க வதற்குத் தக" என்ற தேவர்வாக்கியத்தைச் சிந்தியாதவராய், முதலிசாதனங்களைக் கைப்பற்றிலேம். ஆகவே அவருடைய சரித்திரத்தின் முக்கிய அமிசங்களைக் கூறி சைவ சமயத்தைமாத்திரமன்று, தமிழிலக்கியத்தையும் அவர் எவ்வாறு செறியச் செய்தனரென்பதையும், அவருடைய பெருந்தகைமையையுமாராய்வது, இவ்விடத்தில் ஏற்புடைத்தாகுமெனச் சிறியேன் அபிப்பிராயங்கொண்டனன்.

பண்டைக்காலத்தில் தென்னிந்தியாவில் பல சாதியாரும், பல மதத்தினரும் வசித்தனர், அக்காலத்தவர் அபிமானம் மிக்குடையாரெனப் பல்லாற்றானும் புலனாகின்றது. அபிமானங்களுட் சமயாபிமானமே அவரிதயத்தில் ஆழ வேரூன்றியிருந்தமைபற்றி, ஒருவரோடொருவர் நாடோறும் வாதம்புரிந்து தத்தம் மதத்தைப்போற்றி வந்தனர். இப்படி வருங்காலை, கி. பி 900 வரையில் சைனரும் பௌத்தருமொருமித்துச் சைவசமயத்தை யறவேயொழிக்கப் புகுந்தனர். இத்தருணந்தான் சைவசமயத்தை இப்புறச்சமயிகள் வலியினின்றும் பாதுகாத்து ஸ்தாபிப்பதற்கு மாணிக்கவாசகர் அவதரித்தாற் போற்றோன்றினர். இவருடைய காலம் கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டு என்று ஊகித்தற்கிடனுண்டு. வேறு சிலர் ஏழாம் எட்டாம் நூற்றாண்டென்று நினைக்கின்றனர். ஆனால் இவர் திருஞானசம்பந்தற்கு முன்போந்தவரானமையாலும், முன்னவர் காலம் கி. பி ஏழாம் நூற்றாண்டென்று வரையறுக்கப் பட்டமையாலும், இக்காலத்துக்கு முன்னர் தோன்றினரென நிச்சயிக்கின்றேரும். இள ம் பிராயத்திலேயே புத்தியிகப்பெற்று, அரும்பெருங் குணங்கள் ஒளிர விளங்கினர் இவருடைய யோக்கியதையையும், சாமர்த்தியத்தையுங் கேள்வியுற்ற அரிமர்த்தபாண்டியன் இவரையழைத்துத் தனது முதன்மந்திரியாக்கினன். இவ்வாறு மந்திரியாக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுத் தன் உத்தியோகத்திற்குண்டாகிய கடமைகளைத் தவறு து நடாத்திவந்தாலும், இலைகள் தன்னுடைய வைதிக ஒழுக்க ங்களுடன் முரணி நிற்கவொட்டாது அதிகாரஞ்செலுத்தி வந்த னர். அமைச்சு வேலை தனக்கிசைந்ததன்று என அறிந்து, அதி னின்றும் விலக ஓர் தருணம் பார்த்திருந்தார்; ஒருநாள் பாண் டியன் பணங்கொடுத்துக் கோச நாட்டிற் சென்று குதிரைகள் வாங்கிவரும்படி கட்டளையிட்டான். வாதவூரர் (வாதவூரரே இவ ருடைய நாமம், மாணிக்கவாசகர் என்பது பின்போந்த காரண ப்பெயர்) அரசன் ஆஞ்ஞைக்கிசைந்து திருப்பெருந்துறை நோ க்கிச் சென்றனர்.

விருட்சங்களெல்லாம் தளிர்விட்டோங்கின. புட்பங்கண்மீது செம்பொறி வண்டினமார்ப்பத்தென்றல் நறுமணம் யாண்டும் பரப்பி வீசிற்று. பட்சிசாலங்களும் "இயனிலைமாதின்" அழகை யும் தண்மையையும் மெச்சிக் குதூகலிப்பவர்போல் ஓசை பா டின. இவையெல்லாம் வசந்தகால வரவை யுணர்த்தி நிற்க வாத ஊரரும திருப்பெருந்துறையைச் சேர்ந்தனர் இவ்விடத்தில் ஓர் குருந்தமரத்தடியில் ஒரு தபோதனர் தன்னுடைய 999 சீடர்க ளுக்கு ஞானோபதேசஞ் செய்யக்கண்டு, அவரைநண்ணி கையி ற் கொண்ட நூலென்ன வென்று வினவினர். 'இதுவே சிவஞா னபோத' மென்றன்னவர் சொல்லக் கேட்ட மாத்திரத்தில், வாத ஊரர் திகிலுற்றவர்போற் றன் வசமழிந்து, தன்னையும் ஒரு சீடராய் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டனர். தன்னபீஷ்ட மளிக் கப்பெற்று, தன்னிடமிருந்த திரவியங்களெல்லாவற்றையும் தன் குருவுக்கு அறநெறிகளிற் செலவு செய்யும்படி கொடுத்தனர். இச்சம்பவங்களைப் பரிவாரங்கள் மூலமாயறிந்த அரசன், தனக் குரிய திரவியங்களைத் திருப்பி யளிக்கும்படி நிருபம் போக்க, தொண்டர் தான் செய்யத்தக்கதென், என்று தங்குருவையுசா வினர். அவர் ஓர் பல்லக்கும், அரசனுக்கு ஓர் இரத்தினமும் கொடுத்து, நகர்புகுந்து குதிரைகள் ஆவணி பத்தொன்பதாம் நாளில் வரும் என விடையளிக்கும்படி ஏவினர். நகரடைந்த மாத்திரத்தில் துட்டர்சொற்கேட்டு அரசன் அடியாரைச் சிறை ச்சாலையில் வைத்தனன். இங்கிருந்து துன்புற்றுப் பரமபிதா வின் உதவியை வேண்டிநிற்புழி குதிரைகள் வந்துசேர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரைக்காரர்களுக்குத் தன் சந்தோஷநிமித்தமாய் ஒவ்வொரு சால்வை கொடுக்க அவர்கள் சற்றும் பணிவின்றி ஏற்றதைக்கண்ட அரசன் சினங்கொள்ள, அதுவே அத்தேசத்தவர்க்குள்ள வழக்கமென்று விடைபெற்றனன். குதிரை வணிகனுய் முன் வந்த 'குருந்த மரத்தடிக்குருவை' க்கண்ட தொண்டருக்குண்டாகிய ஆனந்தமளவிடற் பாலதோ? குதிரைகளை மரங்களில் கட்டிவிட்டு அஸ்தமனமானமையால அரசன் அரண்மனை புகுந்தனன். ஆனல் அன்றிரவு நடந்த விபரீதங்கள் என்னென்றெடுத்துரைப்போம்! காட்டில் நரிகளே பரிகளாக்கப்பட்டமையால், அவைகள் பின்னும் தம்முருவெடுத்து, கிராமத்தில் பல நஷ்டங்களை விளைத்துக்காடுசென்றன. மற்றைநாட்காலையில் இதையறிந்த அரசன் தொண்டர்மேற் கோபமிக்குள்ளவனுய் அவரைத் தண்டிக்கும்படி ஆஞ்ஞாபித்தனன. கட்டுரை அதிகம் விரியுமென்றஞ்சிப் பிட்டுக்கு மண்சுமந்த பிரிவை விடுத்துச் செல்கின்றோம். அது வாதவூரர் புராணத்தில் பல கற்பனலங்காரமுமமைய எடுத்துக் கூறப்பட்டமையால் ஆண்டுக் கண்டுகொள்க. இப்பரியை நரியாக்கிய செய்தியை தம்பாடல்களில் பலவிடத்திலும் கூறுவார், திருவாசகம் ஆனந்தமாலையினும்

"நரியைக் குதிரைப்பரியாக்கி, ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம், பிச்சதேற்றும் பெருந்துறையாய்"

என்று பாடினர்.

இனி இவர் பாடல்களைப்பற்றி ஏதேனுஞ் சொலலப் புகுமுன்னர், "இவர்பொருட்டுக் கடவுளர் செய்த அற்புதங்களின் அர்த்தமும நோக்கமுமென்னே," என்று பலரும் வினவக்கூடும். அதற்குத்தரமாய், இவைகளையே இந்துக்கள் திருவிளையாடலென்று கூறுவர். திருவிளையாடலின் மகிமையையும், அது மக்கட்கு எவ்வாறு கற்பனை போதிக்குமென்பதையும், எந்தக் காலமும், இடர்ப்பட்டவர்களுக்குக் கடவுள் உதவியால நின்று எவ்வாறு ஆட்கொள்வாரென்பதையும் திருவிளையாடற் புராண மூலமாய் அறிந்துகொள்ளலாம். சுருக்கிச்சொல்லுங்கால், அவை நம்பினேர் கைவிடப்படார் என்னும் உண்மையை வற்புறுத்திக்காட்டும் இயல்பின.

கி–பி. 200 ஆண்டுவரையினும் கடைச்சங்கப் பிற்கால கவிவாணராலும், 200-400 வரையில் இளங்கோ சாத்தனுமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் பௌத்தர்களாலும், நூற்பரப்பு அதிகம் விரியப்பெற்ற தமிழிலக்கியம், பின் இருநூறு வருடங்களாய் வளர்ச்சி குன்றியிருப்ப, இக்கால இறுதியில் மாணிக்கவாசகர் உதித்தனர். அவருடைய வாசகங்கள் ஒவ்வொன்றும் கருத்துக்கள் ஆன்றமையப்பெற்று, மாணிக்கம்போல் தெரிந்தியற்றப் பட்டமையால் மாணிக்கவாசகர் என்னுங்காரண நாமத்துடன் விளங்கினர்.

மாணிக்கவாசகரும், அவர்பின் தோன்றிய முப்பெருங்குரவரும் சைவத்தை நாடெங்கும் ஸ்தாபித்ததேயன்றி தமிழிலக்கியத்தையுஞ் சிறக்கச்செய்தனர் அவர்களுடைய பாக்கள் சமயச்சார்பாயும், தோத்திரவண்ணமாயு மிருந்தபோதிலும், உலகவனுபவங்கள் பலவற்றுடனும், அடிபட்டவரால் இயற்றப்பட்டமையின், யாவரும் அங்கீகரிக்கத்தக்க கருத்துக்களை அடக்கியுள்ளன. மாணிக்கவாசகர் யாத்த நூற்களில் திருக்கோவையாரும், திருவாசகமும் மிக முழங்குவன. திருக்கோவையார் பெரும்பாலாய் அகப்பொருளோடு சம்பந்தமுள்ள நூல் இதைப்பற்றிப் பிறிதோரமயத்தில் விரிவாய்க்கூற எண்ணி, இவ்விடத்து விடுத்துச்செல்வாம்.

இக்காயத்தினின்று ஆன்மா எவ்வெந்நிலைகளை யடைந்து முடிவில் பிறவிப் பிணியையகற்றி எவ்வாறு சிவத்தொடு கலக்கின்றதென்பதே திருவாசகத்தின் சாரம். அதுமுற்றிலும் தற்குறிப்பாய்ப் பாடப்பட்டது. அதாவது மாணிக்கவாசகர் மானிடர்க்குப் பொதுவாயுள்ள அனுபவங்களைத் தன்மேலேற்றிப் பாடினர். அவருடைய குருபக்தியின் திறமையும் வீட்டின்பமெய்துவதற்கு ஆன்மாவிற்குண்டாய பேர் ஆர்வமும் இப்பாடல்களினின்றும் புலனாகும் தொண்டர் இவற்றுட் பெருமபாலனவற்றைத்தாமரைத் தடாகத் தெழுந்த சுடரிற் புகாதபடி விடப்பட்டபொழுது பாடினர்போலும். திருச்சதகமுற்றிலும் அளவிறந்த பத்திச்சுவை மிகுந்தொழுகப் பெற்றன. வீட்டின்ப மடைவதற்குத்தகமையின்மையையும், அத்தகமைக்குரிய சாதனங்களைத் தேடுதற்கு உழையாத நெஞ்சமுடையா ரென்பதையும், நினைத்துப் பன்முறை புலம்புதல் இருவருடைய மனஎழுச்சியின் அளவை எளிதில் விளக்குகின்றது. தான் தகுதியுடையா னல்லனெனப் பாடியபோது, பொதுவாய் மக்களது தகுதியின்மையே கருதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியை வளர்ப்பதற்கு மானிடர் உழைபாத உள்ளத்தவ ராய் நிற்றலைப் பின்வரும் திருச்சதகப் பாவில் விளக்கினார்.

"ஆடு கின்றிலை, கூத்துடை யான்கழற் கன்பிலை, என்புருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதுஞ் செய்கிலை; பணிகிலை; பாதமலர்
சூடு கின்றிலை; சூட்டுகின் றதுமிலை; துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை; தெருவுதோ றலறிலை; செய்வதொன் றறியேனே

வேறோரிடத்தில் (திருச்சதகம் 55) சிவபெருமானால் ஆட்கொள் ளப்பட்ட மகிழ்ச்சியையும், வேலைக்கு அவரடி சேராததைக்கு றித்த மனவருத்தத்தையும் காணலாம். ஆன்மா உலகபாசத்திற் பற்றுண்டு சடைத் தேறும் வகையறியாது காருண்யராகிய ஈச னுடைய உதவியை வேண்டி நிற்குமாற்றை நீத்தல் விண்ணப் பத்திற்காணலாம். அதன் முதற்பாடலே பொருத்தமான உதா ரணம்.

"கடையவ னேனைக் கருணையினாற் கலந் தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல்வேங் கையின் றோல்
உடையவனே மன்னுமுத் தரகோச மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேனெம்பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

இப்பாடல்களில் சிற்சில தத்தம் யாப்பமைப்பிலிருந்தும் "உத்த ரகோசமங்கை" யென்னும் பதம் வராமையாலும், மாணிக்கவா சகராற் பாடப்பட்டனவோ வென்று மேற் புலபண்டிதர்களிலொ ருவர் ஐயுறுகின்றனர். ஆனால் ஆங்கில வியாக்கியான முறைகளை ச்சமயச்சார்பாகிய இந்நூலுக்குப் பிரயோகிப்பது புத்தியின்பால தோவென்று நாம் ஐயுறுகின்றனம். இப்படியே அவருடைய பா டல்களில் விலக்கத்தக்கதொன்றின்றி திருவெம்பாவை, திருவம் மானை, திருப்பொற்சுண்ணம் ஆதியவை இவருடைய மேம் பாட்டை விளக்குகின்றன. திருவெம்பாவையை விடியற்காலம் (மார்கழியில்) ஸ்நானஞ்செய்து ஆலயஞ் செல்லும் ஸ்திரீகள், குளக்கரை செல்லும்போது ஒருவரையொருவர் 'அமளி' யினி ன்று எழுப்புவதற்காகப் பாடிக்கொடுத்தனரென்று கதையுண்டு. இதில் எவ்வாறு பாஷையானது பாடுபவர் இயற்கைக் கேற்ப இ யைந்துள்ளதென்பதை நாம் கவனிக்க வேண்டியது. மிகச் சுலப மான சொற்கோவையும், மிக எற்புடைத்தாய பண்ணையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மானேநீ நென்னலை நாளைவந் துங்களை,
நானே யெழுப்புவ, னென்றலு நாணாமே,
போன திசை பகராய், யின்னம் புலர்ந்தின்றோ,
வானே நிலனே, பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்,
வான்வார் கழல்பாடி, வந்தோர்க்குன் வாய்திறவாய்
யூனே யுருகாய், யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப், பாடேலோரெம்பாவாய்.

என்ற திருவெம்பாவையினின்று உணரலாம்.

திருப்பொற்சுண்ணம் ஈமைக்கிரியைசெய்யும போழ்து தான் பாடத்தகுமெனச் சிலர் அபிப்பிராயங்கொள்ளுகின்றனர். ஆனால் அதின் வரலாற்றைநோக்கின் அது உலக்கைவேலை செய்யும்போதெப்போழ்தும் பாடலாம். அவருடைய பாக்களில் திருக்கோத்தும்பி, கிளிப்பத்து, குயிற்பத்து, ஆதியவை வருணனைகள் செறிந்து அழகுமிக்குடையன. இவைகளில் இரண்டொரு பாக்களால் அவருடைய கவித்திறம் நிருவப்படும். தும்பி, கிளி, குயிலிவையெல்லாம் ஆன்மாவையே குறிப்பாற் கருதின. வாழ்க்கையின் நிலையின்மையை வற்புறுத்துவான், திருக்கோத்தும்பியில்,

“வைத்தநிதி பெண்டீர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ!”

என்றனர். இத்துடன் பட்டினத்தடிகளுடைய

ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல, பெண்டீர் சதமல்ல, பிள்ளைகளுஞ்
சீரும் சதமல்ல, செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல, நின்றாள் சதங் கச்சி யேகம்பனே’’.

என்னும்பா ஒத்து நோக்கற்பாற் றென்றிவ்விடந் தந்தோம். திருச்சாழலும் கிளிப்பத்தும, வினாவிடையாய் இயற்றப்பெற்றமையால் மிகச்சிறப்புடையன. அதுவுமன்றிக் கிளிப்பத்தும் குயிறபத்தும் சத்தம் சொற்பாவனையால், மாணிக்கவாசகரின் பாவன்மையை விளக்கா நின்றன. கிளிப்பத்திலொன்றை இவ்விடம் தருகின்றனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏரமிலா வின்சொல் மாகதமே யேழ்பொழிற்கு
நாதனமை யாளுடையா னுநிரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா வருள்புரிவா னுடென்றுந்
தென்பாண்டி நாடே தெளி"

இதுமாத்திரமன்று, மற்றை ஒன்பது வெண்பாவினும் கிளியை எவ்வாறு அழைக்கின்றாரென்று ஆராயுங்கால் அவருடைய பாவன்மை ஒருவாறு நிறுவப்படும். எமதொண்டர் மனுஷர் பெண்வயத்தினராதலைப் பற்றிக்கூறவில்லையோ எனின், பலவிடங்களில் ஸ்திரீவலையிற் சிக்குதலைப்பற்றிக் காண்கிறோம். அவற்றில் அடைக்கலப்பத்தில்,

"சுருள் புரிகூழைபர் சூழலிற்
பட்டுன்றிறமறந்திங்......கருள்புரி"

அச்சப்பத்திலும்,

"கிளியனார் கிளவியஞ் சேன்
அவர் கிறிமுறுவலஞ் சேன்.. ......"

பின்னும் அச்சோப்பத்தில், அனுபவவழி யறியாமையைப் பற்றிச் சொல்லுங்கால்,

"சாதல் பிறப் பென்னுந் தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின் மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை,
மாதொருகூ றுடைய பிரான் றன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே."

என்றுபாடினர்.

காலமுமிடனும் ஒருங்குற அமையாமையால், பலபாடல்களைப் பற்றியொன்றும் பேசாது விடுத்தோம். அவைகளைப்பற்றிப் பேசாமையால திறனிலாதனவெனக் கருதப்படாது. அவைகளும் சீரிய சிறப்புடையனவாய் மாணிக்கவாசகருடைய கலைஞான உணர்ச்சியையும் புலமையையும் காட்டுவன. சிவபக்தி, சமபாபிமானம், புலமை, போதனாத்தத்துவம் எல்லாவற்றிற்கு முறைவிடமாயிருந்த இவருடைய பாடல்கள் அநேகம் ஆலயங்களிற் பாடப்படும். பிள்ளைகள் மாத்திரமல்ல, நாமெல்லோரும் அவைகளைப் பாடம் பண்ணல் அத்தியாவசியம். அவைகள் நாம் தளர்ந்தபோது, ஊக்கவுணவு தந்து, நன்னெறியைக் கைப்பற்ற உற்சாகப்படுத்துமியல்பின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் குருந்தமரத்தடியில் விடப்பட்டபின், தன் ஆஞ்ஞைப்படி பலஸ்தலங்களைத் தரிசித்து, சிதம்பரத்திலிருக்கும்போது, பௌத்தரை வாதில் வென்று, சைவசமயத்தை ஒருவாறு(சம்பந்தர் காலத்திற்றான் சமணர் வெல்லப் பெற்று, சைவ சமய இடையூறுகள் முழுதுங் களையப்பட்டன.)நிலைநாட்டினர். நாற்பெருங்குரவரில் திருஞானசம்பந்தமூர்த்திகளையே தலையாகவைத்தபோதிலும் மாணிக்கவாசகர் இந்துக்களுக்குக் குன்றின் மேலிட்ட ஒளிபோல் வழிகாட்டி, தன் சாதனையாலும் போதனையாலும் அளவிறந்த கற்பனைகளைக் கற்பித்தனர். அவருடைய பாடல்களே பின் பட்டினத்தடிகள், தாயுமானவராதிய யோகிகளுக்கு வழிகாட்டிநின்றன. அவருடைய அபிமானம் நாம் எஞ்ஞான்றும் மறக்கற்பாலதன்று. அவரை மனத்தில் வைத்துத் தமிழர் தத்தம் வாழ்நாள் முற்றும் பிராணுகாரப் பிரயத்தினத்திற் கழியாமல் மத, தேய, சமய, பாஷை, சமுதாய முன்னேற்றங்களை இலக்காக்கி உழைத்து, இறுதியில் வீட்டின்பமெய்துவாராக. அவருடைய பாக்களைப் படிப்பதேயன்றி, அவைகளின் மேன்மையைப் பிறருக்கோதலும், அவைகளின் கற்பனைப்படி ஒழுகலுமே தமிழர் கடன்.

இங்ஙனம்,

ஞா. ஆள்வாப்பிள்ளை.

சர்வகலாசாலை,

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகலாசாலைத் தமிழ்ச்சங்கம்.

## வருடாந்த அறிக்கைப்பத்திரம். 1922—23.

கலைகளிலும் ராஜநீதிகளிலும் முன்னே கொள்ளப்பட்டவை திருப்திகொடாமையால் புதியன கொள்ளவேண்டுமென்ற அதிர்ச்சி உலகெங்கும் பிறந்திருக்கின்றது. இவ்வதிர்ச்சி உண்பதும் உடுப்பதுமே தொழிலாகக்கொண்ட இலங்கையிலும் சிறிதுதாவினமையால்வாலிபரிற் சிலர்தாமவசிப்பதால்உலகிற்கு யாது பயன் உடைத்தோமென தம்முள் வினவுவாராயினர். தம் தாய்மொழியைமறந்து அதிலுள்ள உண்மைகளை யறியாது ஐரோப்பிய தேசத்திற்கேயைந்த அந்நியநாகரீகத்தைக் கைக்கொண்டு வருவதைக் கண்டனர்.

சர்வகலாசாலையிற் கலைபயிலும் மாணவரும் தங்கள் குறைகளை நீக்குமாறு சென்றவருஷம் மார்கழிமாதம் 13ந் திகதி இச்சங்கத்தைத்தாபித்து கல்லூரியின் தலைமையாசிரியரின் கட்டளைப்படி தர்க்கங்களை ஒழித்து வியாசம் வாசித்தலைப் பிரதமதொழிலாகக்கொண்டார்கள், இச்சங்கத்தை ஆரம்பிப்பதில் கலாசாலைக்கணித பண்டிதர்களாகிய திரு. சுந்தரலிங்கமவாகளும் திரு குலசேகர மவர்களும்அதிகமுயற்சி எடுத்தார்கள் நேரிடும் இடையூறுகளிலிருந்து விடுவிக்கவும் இச்சங்கத்தின்வளர்ச்சிக்கு வேண்டிய உதவிபுரியவும் திரு. சுந்தரலிங்கமவர்கள் அக்கிராசனராகத்தெரிந்து கொள்ளப்பட்டார்.

கூட்டங்கள் இருவாரத்துக் கொருமுறையாக சென்ற வருஷம் ஆறு கூட்டங்கள் நடந்தன. அவைகளில் நான்கு கூட்டங்களில் வியாசங்கள் வாசிக்கப்பட்டன. எக்கன்னெஞ்சையு முருககவல்ல மாணிக்கவாசகரில் திரு இராசதுரையவர்களும், கலைஞானமும் சொற்சுவையுமுள்ள தாயுமானவரில் திரு பாலசுந்தரமவர்களும் சமயோசித உபாயமுடைய தமிழ்க்கவி அரசியாகிய ஔவையாரில் திரு நடேசனவர்களும், "சாதியிரண்டொழிய வேறில்லை" என்பதில திரு சோமசேகரமவர்களும் முறையே வியாசங்கள் வாசித்தனர். வியாசம் வாசித்த ஒவ்வொருவரும் தாமெடுத்த விஷயத்தை நன்கு கற்று வாசித்தாரெனினும் தம் கருத்தை வெளியிடுவதற்குக் கஷ்டப்படவேண்டியிருந்தது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய தமிழறிவு இல்லாததினாலும், தமிழ் வசனநடையின் தற்கால நிலையினாலு மென்றே கொள்ளலாம். காலக்கிரமத்தில் எம் தமிழறிவும் வளர, தமிழ் வசனநடையும் முன்னேற இக்கஸ்டம் நீங்குமென்பதற் கையமில்லை.

கூட்டங்களில் திரு அருள் நந்திபவர்களின் தமிழறிவும் எங்கள் சங்கரீது அவர்கொண்டவாஞ்சையும் எங்கள் ஈடேற்றத்திற்கு மிக்கவுதவியாயின. அவர் இப்பொழுது எங்களை விட்டு அரசாங்கத்தில் கல்வி பரீட்சிக்கும் தொழில் பெற்று வடமாகாணத்திற்குப் போயிருக்கின்றனர். அவர் தான் தெரிந்துகொண்ட தொழிலில் விருத்திபெறுவாராக.

தியாகப்பணம் கலைமகள் எம்மிடத்திற் சிறிதேனும் கடாக்ஷம் வைத்திருக்க திருமகள் முற்றும் பராமுகமாய் இருக்கின்றாள். எம்மிடத்தில் பணமில்லாப் பெருங்குறைபால் எமமுயற்சிகளனேகம் செவ்வனே செய்யப்படவில்லை. பணமின்றி ஓர் சங்கமேனும் வளரமுடியாது. பத்திரிகைகள் எடுக்க வெளியிட என்னும் இவைகள்போன்ற முயற்சிகட்கு பணமின்றி எஞ்செய்யலாம் வியாசம் வாசித்தல் போதுமெனவிருப்பது நியாயமன்று. இன்றைவரைக்கும் பிறரிடம் வாங்கி உண்டோம் பிறரால போஷிக்கப்பட்டோம். இனிமேலாயினும் பிறருக்குக் கொடுக்க வேண்டாமா, போஷிக்கவேண்டாமா, "கெட்டார்தனையாரோ கேடொருக்கால் நீங்காதோ"

பத்திரிகை. எம்மிடத்தில் பிறருக்கு அறிவுறுத்துஞ் சக்தி எவ்வளவு இருக்கின்றதென்று விளக்குவதுமன்றி இச்சங்கத்தில் உண்டாயிருக்கின்ற தமிழபிமானத்தையும் ஊக்கத்தையும் மற்றுமிடங்களிலும் செறியச்செய்வதும் எம் கடமையே. அக்கடமையைச் செய்வதற்கு ஓர் பத்திரிகை யவசியம்.

அங்கத்தவர் முன்னிலும்பார்க்க எம் அங்கத்தவர் தொகை அதிகரித்திருக்கின்றது. அத்துடன் இச்சங்கத்திலெல்லோரும் அதிக ஊக்கம் எடுத்திருக்கின்றார்கள் ஆகையால் எம் சங்கம் இவ்வருஷம் முன்னிலும் அதிகமாய் வளர்ந்து எம் சாதியத்தின் ஈடேற்றத்திற்கு ஓர் முக்கிய கருவியாய் வரவேண்டுமென்பதே எம் விருப்பம் இச்சங்கம் சிறிதேனும் எங்களுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷாபிமானம் தேசாபிமானம் முதலியவற்றை ஊட்டினுல் அதன்நோக்கம் பாழ்படாது; அப்பொழுதே எம் தேயமும் செழிக்கும்; எமது தமிழ்மொழியும் செழிக்கும்; நாமும் சிறப்படைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகலாசாலைத் தமிழ்ச் சங்கம்.

## வருடாந்த அறிக்கைப் பத்திரம். [1923--24.]

எமது சங்கம் தொடங்கி இரு வருஷங்களாயின. இது வரையில் இச்சங்கம் எவ்வாறுயிற்றேவெனின் நாம் விரும்புகிற வண்ணம் அது வளராவிட்டாலும், நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றது. தமிழறிவிற் சிறந்தவர்கள் எம் அங்கத்தவரிற் சிலரே. ஆனாலும் சென்றவருடம் எங்கள் சங்கம் போதிய முயற்சி செய்தது என்பதற்கு ஐயமில்லை.

சென்ற வருஷமும் திரு சுந்தரலிங்கமே அக்கிராசனராகத் தெரியப்பட்டார். அவருடைய உதவிகள் அனேககாலங்களில் இன்றியமையாததாயிருந்தது. பலமுறை அவர் சமுகமளிக்க வசதியில்லாதிருந்தபோதிலும், அவரின் ஊக்கமிச்சங்கத்தை விளாமல் தாங்கி வந்ததென்பதற்கு ஆட்சேபமில்லை. ஆனால் எம் சங்கம் வளரவேண்டுமென்றால் வேறொருவரில் நாம் தங்கக் கூடாது. கலாசாலையில் தமிழ்ப்பண்டிதர் ஏற்படுத்தியதோடு எமக்குத் தமிழறிவை ஊட்டுதற்குப் போதிய ஆசிரியரில்லாதகுறை நீங்கிவிட்டது, எம் சங்கத்திற்கு அவரால் அதிகநன்மை ஏற்படுமென்று எண்ணுகிறோம். ஆனால் அவரிடத்திலிருந்து நாங்கள் உதவிபெறுமுன் எங்கள் தமிழ்மொழியின்மீது நாம்கொண்டவாஞ்சையால் நாம் அவ்வுதவிக்குத் தக்க பாத்திரவாளிகள் என்பதைக்காட்டவேண்டும்.

கூட்டங்கள். சென்றவருடம் 8 கூட்டங்கள் நடைபெற்றன அவற்றுள் 7 சாதாரண கூட்டங்கள். அதற்கு முந்தியவருடம் 4 சாதாரண கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் அநேகர் எமக்குப்போதிய தமிழறிவு இல்லையென்று, பேசுதற்குப்பின் நிற்கின்றனர். ஆங்கிலம் பிறபாஷையாயிருந்தும், அதில் அதிக அறிவு இல்லாவிட்டாலும் ஆங்கிலக்கூட்டங்களில் பேச முயலுகின்றனர்.

தமிழ் எம்தாய்மொழி; நாம் வீட்டிற்பேசும்மொழி; இதில் பேசக்கூச்சமேன்? தமிழறிவு இல்லாவிட்டால் அவ்வறிவை வளர்ப்பதற்கு ஒரு நாளைக்கு ஒருமணிநேரம் செலவழிக்கக்கூடாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைவிட அநேகர் காரியதரிசி தமிழ்ச்சங்கக் கூட்டமென்று அறிவித்தவுடன் ஓர் யாசகனைப் பார்த்தாற்போல் பரிதாபமுள்ள நிந்தனையுடன் பார்த்து உவ்விடத்தில் என்ன செய்கின்றீர்கள்? என்றுவிட்டுப் பந்து அடித்து விளையாடி அல்லது ஒருவரிலும் ஒருவர் மேம்பட்ட கூச்சலிட்டுச் சந்தோஷமாகத் தம் நேரத்தைப் போக்குகின்றனர். பந்தடித்தல் கூச்சலிடல போன்றபிறவும் எம் வாழ்விற்கு அவசியமானாலும் இருவாரத்திற்கு ஒருமுறை இவைகளை இழத்தல் எம் தமிழிற்காக நாம்செய்யும் பெரும்பலி ஆகாதே.

வியாசம் வியாசமென்று கூட்டங்கள் நடத்துகிறீர்கள் என்று சிலர் கூறியமையினால் சென்ற வருடம் நம் சங்க விருந்து ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மின்னல் இடிமுழக்கத்தோடு விடா மழையும் மனுடசுபாவத்தால் எழும் பிரிவினைகளும் இக்கொண்டாட்டத்தைத் தடுக்கமுயன்றும், அக்கொண்டாட்டம் இச்சங்கத்தின் நல்வினையினால் நடந்து நிறைவேறியது. இத்தகைய காரியங்களிற் பிரிவினைகள் உண்டாதல் வளக்கமாயினும் கல்வியறிவில்மேம்பட்டவர்கள் இருக்குமிச்சங்கத்திற்கு அவையழகல்ல அவை இனிமேல் நேரிடாமல் காத்தல் ஒவ்வோர் அங்கத்தவரினுடையவும கடமையே.

தியாகப்பணம் எம்மங்கத்தவரில் பெரும்பாலார் தியாகப் பணம் ஒழுங்காகக் கொடுக்காததினால் எம்மிடத்தில் உள்ளபணம் மிகச்சொற்பமே. எம்மிடத்தில் இப்பொழுது ரூபா 63 தான இருக்கின்றது

முறைக்கு முறை தியாகப்பணம் கொடாது விடுவதுமாத்திரமல்ல; பணமகேட்கப்போகிறவர்களை "என்ன, சிலநாட்களுக்கு முன்னம்தான் கொடுத்தோம்; இன்றுமேன்" என்று கோபித்துக்கொள்ளுகிறார்கள். காலம் விரைவாகச் செல்வது உலகவியற்கையின்பிழையல்லாமல் எமது சஙகத்தின் பிழையல்லவே,

பத்திரிகை. பணமின்றி என்செய்யலாம். தியாகப்பணம் அதிகமில்லாததினாலும் என்னும்வேறுதடைகளினாலும நாம்தீர்மானித்தபடி சென்றவருடம் எம் சஞ்சிகை வெளிவரவில்லை. அது விரைவில் வெளிவருமென நம்புகின்றோம். பத்திரிகையைப்பற்றிக் கூறும்பொழுது. அப்பத்திரிகைக்கு முதற்காரணராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று உழைக்கும் பத்திராதிபாரம் திரு மு. பாலசுந்தரம் அவர்களைப்பற்றிக் கூறுதவிடுப்பது எங்ஙனம். இச்சங்கம் தொடங்கியநாள்முதல் விடாமுயற்சியாய் இதற்காக அவர்செய்த நன்மைகள் சொல்லத்தக்கனவன்று. அவர் தொடங்கிய முயற்சியை இந்தவருடமும் பத்திராதிபாரகவிருந்து முடிப்பதே எங்கள் சங்கத்திற்கு அவர் செய்யத்தக்க பேருதவி.

சர்வகலாசாலையிலுள்ள தமிழ்மக்களின் தொகை அதிகரித்தலோடு தமிழிலுள்ள ஊக்கமும் அதிகரித்துவிட்டதுபோல் தோன்றுகின்றது. எந்தநாள்வரையும் அடிமைகளாகவிருப்போம். சேரனில்லை, சோழனில்லை, பாண்டியனில்லைஎமையாதரிக்க; கம்பரில்லை, மாணிக்கவாசகரில்லை எமக்கு ஏவல்செய்ய, என்று வருந்தும் தமிழணங்கின் குறைகள் தீரும்நாள் எப்போதுவரும். தமிழ்வாலிபரன்றி வேறியார் உதவுவர். இச்சங்கத்தில் இப்போ புதிதாக வந்து சேர்ந்தவர்களும் முன்னிருந்தவர்களும் எம் தமிழ்மொழிக்காகவும் தேசமகிமைக்காகவும் குறையாத ஊக்கத்தடன் என்றும் ஒத்து உழைப்பார்கள் என்பதே எம்நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகலாசாலைத் தமிழ்ச் சங்கம்.

## முதலாம் வருஷ உத்தியோகஸ்தர்கள்.

| | |
|---|---|
| அக்கிராசனர் | திரு. செ. சுந்தரலிங்கம் |
| உபஅக்கிராசனர் | ,, ச அருள்நந்தி |
| காரியதரிசி | ,, சி. உ சோமசேகரம் |
| உபகாரியதரிசி | ,, சோ. நடேசன் |
| தனாதிகாரி | ,, சி. கந்தையா |

### நிருவாகசபை அங்கத்தவர்.

செ. சோமசேகரம்பிள்ளை; மு. பாலசுந்தரம்; ஞா. இராசதுரை; சி. வெற்றிவேலு.

## இரண்டாம் வருஷ உத்தியோகஸ்தர்கள்

| | |
|---|---|
| அக்கிராசனர் | திரு. செ சுந்தரலிங்கம் |
| உபஅக்கிராசனர் | ,, வே. குலசேகரம் |
| காரியதரிசி | ,, சோ. நடேசன் |
| உபகாரியதரிசி | ,, ஆ. நடராஜா |
| தனாதிகாரி | ,, வி. மு. ஆசைப்பிள்ளை |

### நிருவாகசபை அங்கத்தவர்.

ஆ. கந்தையா; மு. பாலசுந்தரம்; ம. சோமசுந்தரம்; ஜெ. போல்.

## மூன்றாம் வருஷ உத்தியோகஸ்தர்கள்.

| | |
|---|---|
| அக்கிராசனர் | திரு. அ. விநாயகம்பிள்ளை |
| உபஅக்கிராசனர் | ,, ஆ. கந்தையா |
| காரியதரிசி | ,, ஆ. நடராஜா |
| உபகாரியதரிசி | ,, ஆ. இ தம்பர் |
| தனாதிகாரி | ,, த. சின்னத்தம்பி |

### நிருவாகசபை அங்கத்தவர்.

சோ. நடேசன்; கோ. ஆழ்வாப்பிள்ளை; ந. கிருஷ்ணதாசன்; மு. கனகசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 5 | 8 | Shakespeear | Shakespeare |
| 7 | 24 | வழர்க்க | வளர்க்க |
| | 29 | உலமுழுவதும் | உலகமுழுவதும் |
| 11 | 32 | விருவியுனைம் | விருவினையும் |
| 14 | 30 | னன்றே | நன்றே |
| 15 | 9 | நங்நூர் | நங்தூர் |
| 16 | 2 | தீக்கொண் | தீக்கொள் |
| 17 | 23 | திரெபதியும் | திரௌபதியும |
| 18 | 16 | மனக்குளம்பு | மனங்குழம்பு |
| 19 | 1 | என்னாளும் | எந்நாளும |
| | 11 | உயற்றி | உயர்த்தி |
| | 15 | கடங்கதா | கடங்காத |
| 20 | 15 | மகிற்தூபப் | மகிழ்தூபப் |
| | 19 | சண்பம் | சண்பகம் |
| | 21 | நானளிதன்றே | நன்னளிதண்றே |
| | 23 | இன்னெளம் | இந்நாளெம் |
| 21 | 7 | தென்னரு | தெந்நாரு |
| | 21 | ஒழி | ஒளி |
| | 22 | என்னர் | எந்நாளும் |
| 22 | 23 | எஙகண்ணும் | எங்கணும் |
| 29 | 4 | புலர்தன | புலாந்தன |
| | 9 | முருசுஞ் | முரசுஞ் |
| | 32 | விநோசங்களை | விநோதங்களை |
| | 34 | உலகத்தோற்கு | உலகத்தோர்க்கு |
| 30 | 15 | சஞ்சடி | சந்தடி |
| 32 | 12 | நாளிகை | நாழிகை |
| 39 | 14 | கருனை | கருணை |
| 44 | 20 | தளையாரோ | தழையாரோ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வகலாசாலைத் தமிழ்ச்சங்கத்தாரால்
பிரசுரிக்கப்பட்டது.

மெய்கண்டான் பிறெஸ், 99, ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org